வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 09.07.2022 சனிக்கிழமை இதழ் : 215 பக்கங்கள் : 16




# இன்று அரசுக்கு எதிராக போராட்டம் படையினருக்கு நிதானம் அவசியம்!

## ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்து

ஜெனிவா, ஜூலை. 09

அரசுக்கு எதிராக இன்று நாடு தழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் படையினர் நிதானமாக நடப்பது அவசியம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையார் கோரியுள்ளார்.

இன்று சனிக்கிழமை இலங்கையின் கொழும்பில் ஒரு பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இலங்கை அதிகாரிகள், நாட்டின் பொலிஸ்துறையின் நிதானத்தை பேணவும், வன்முறையைத் தடுக்க தேவையான அனைத்து முயற்சிகளையும் உறுதிப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் கோரியுள்ளார்.

15



# கொழும்பில் இன்று மாபெரும் போராட்டம்!

- தலைநகரில் பெரும் பாதுகாப்பு
- இ. போ. ச. பணி புறக்கணிப்பில்

கொழும்பு, ஜூலை 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று சனிக்கிழமை கொழும்பில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றது. இந்தப் போராட்டத்துக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

15

## தனது மாளிகையிலிருந்து ஜனாதிபதி வெளியேற்றம்?

கொழும்பு, ஜூலை 09

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரின் மாளிகையை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி, அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி, இன்று சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம்

15

## தற்போதைய நிலைக்கு சில தினங்களில் தீர்வு!

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை. 09

எரிபொருள், எரிவாயு, மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15

## மேல் மாகாணத்தில் ஊரடங்கு நடைமுறை!

கொழும்பு, ஜூலை 09

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களின் முக்கிய பகுதிகளில் நேற்றிரவு 9 மணிமுதல் மறுஅறிவித்தல் வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி, நுகேகொடை, களனி, நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுகளுக்கே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## அமைதி ஆர்ப்பாட்ட போர்வையில் வன்முறையை தூண்ட முயற்சி!

### பாதுகாப்பு செயலர் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 09

அமைதியான ஆர்ப்பாட்டங்கள் என்ற போர்வையில் சில சக்திகள் வன்முறையை தூண்ட முயல்கின்றன என்ற தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் அனைத்து பொதுமக்களையும் பொறுமையுடன் செயற்படுமாறு கேட்டுக் கொண்டுள்ள அவர் சட்டவிரோத நடவடிக்

15

## ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுட்டுக்கொலை

ரோக்கியோ, ஜூலை 09

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து துப்பாக்கியால் சுடப்பட்ட ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே (வயது 67) நேற்று பிற்பகல் மருத்துவமனையில் மரணமானார்.

ஜப்பானில் நரா நகரில் இடம்பெற்ற இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில், முன்னாள் பிரதமரின் மார்பு மற்றும் கழுத்தில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்தன.

15

## பல்கலை மாணவர் பேரணியில் நீர்த்தாரை, கண்ணீர் புகை வீச்சு



கொழும்பு, ஜூலை 09

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுத்த அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணியை கண்ணீர் புகை குண்டுகளை வீசியும்,

15

## கோட்டாபய பதவி விலகும் வரை ஜனாதிபதி மாளிகை சுற்றிவளைப்பு

### சஜித் அணி பகிரங்க அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 09

ஜனாதிபதி மாளிகையை இன்று சனிக்கிழமை சுற்றிவளைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை அங்கேயே தங்கியிருப்போம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தாங்கள் கோட்டை ரயில் நிலையத்தில் ஒன்றுகூடி, பின்னர் ஜனாதிபதி மாளிகையை நோக்கி பேரணியாகச் செல்வோம் என்றும் ஜனாதிபதி பதவி விலகும் வரை அங்கேயே இருப்போம் என்றும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரத்ன மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் நேற்று

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

அது ஒரு பிரபல வர்த்தக நிறுவனம். அதன் பிரதம நிர்வாகி தனது ஊழியர்களை அழைத்து கூட்டம் ஒன்றை நடாத்தினார். சுமார் முன்னூறு பேர் அங்கு பணியாற்றி வந்தனர்.

அதன் தலைமை நிர்வாகி சொன்னார், "நான் எவ்வளவுதான் திறமை உள்ளவனாக இருந்தாலும், என்னால் மாத்திரம் இந்த நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்திச்செல்ல முடியாது. இங்கிருக்கின்ற ஒவ்வொருவரும், கடைநிலை ஊழியர் வரை அவரவர்கள் தத்தமது கடமையை சரியாகச் செய் தால்தான் இந்த நிறுவனம் வெற்றிகரமாக இயங்கமுடியும்.' என்று.

இது ஒரு நிறுவனத்திற்கு மாத்திரமல்ல, ஒரு நாட்டுக்கும் பொருத்தமானதுதான்.

நாட்டின் தலைவர், எவ்வளவுதான் கெட்டிக்காரராக இருந்தாலும், அமைச்சர்கள், அதிகாரிகள் சரியாக இயங்கவில்லையென்றால், அந்த நாடு உருப்படாது.

அதேபோல ஒரு நாட்டில் தலைவர் கெட்டிக்காரராக இல்லாவிட்டாலும், அவரின் கீழ் பணியாற்றுகின்ற அமைச்சர்கள், அதிகாரிகளாவது கெட்டித்தனமாக இருந்தால் அந்த நாட்டை சரியாக வழிநடாத்த முடியும்.

நமது நாட்டில் நடக்கின்ற ஒவ்வொரு விசயங்களையும் பார்க்கின்றபோது தலைவர்கள் மாத்திரமல்ல, எல்லோர் மீதும் சந்தேகம் ஏற்படுவதை தவிர்க்க முடியவில்லை.

கொரோனா பெருந்தொற்றுக்காலத்தில் வடக்கில் தடுப்பூசி விநியோகிக்கப்பட்டபோது, அதனை நிர்வகித்தவர்களின் நிர்வாக திறமை பலராலும் விமர்சிக்கப்பட்டது.

அந்தக் காலத்தில் தடுப்பூசிக்காக மக்கள் முண்டியடித்த போது, வேறு மாவட்டம் ஒன்றில் நான் சந்தித்த ஒரு நண்பர், தான் தனக்கான தடுப்புசியை யாழ்ப்பாணத்திலேயே பெற்றேன் என்றார்.

தனது உறவினரான அந்த உயர் அதிகாரி தன்னை யாழ்ப்பாணம் அழைத்து தடுப்புசி பெற்றுக்கொள்ள உதவினார் என்றார் அவர்.

இப்போது, மக்கள் பெற்றோல், டீசலுக்காக மணித்தியாலக்கணக்காக வரிசையில் நிற்கின்றனர்.

ஆரம்பத்தில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதும் குடும்ப அட்டைக்கே எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பின்னர், அந்த முறை கண்டுகொள்ளப்படவில்லை. பின்னர் ராணுவத்தினர் டோக்கன்கள் வழங்கினார்கள். அதுவும் பின்னர் காணாமல்போனது.

இப்போது அத்தியாவசிய சேவையினருக்கு மாத்திரமே எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது.

அதேவேளை, இலங்கை முழுவதுமுள்ள ஐ.ஓ.சி. விற்பனை நிலையங்கள் ஊடாக, தமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று ஐ.ஓ.சி. அறிவித்திருந்ததுடன், அவ்வப்போது தமது விற்பனை நிலையங்களுக்கு எரிபொருளையும் விநியோகித்து வருகின்றது.

கொழும்பில் இரண்டு நாட்கள் வரிசையில் நின்று தனது காரில் பெற்றோல் நிரப்பிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்த நண்பர் ஒருவர், இங்கு வந்து சேர்ந்ததும் திரும்பி கொழும்பு செல்வதற்காக இங்குள்ள நிலையம் ஒன்றுக்கு சென்று இரண்டுநாட்கள் வரிசையில் நின்று கடைசியாக நான்காயிரம் ரூபாவுக்கு பெற்றோல் நிரப்பிக் கொண்டாராம். அந்த பெற்றோலுடன் கிளிநொச்சிவரையே அவரால் செல்ல முடியும். அதனால் காரை இங்கேயே நிறுத்திவிட்டு கொழும்பு திரும்பிவிட்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐ.ஓ.சி. நிலையங்களும் இப்போது நமது அதிகாரிகளாலும் இராணுவத்தினராலுமே நிர்வகிக்கப் படுகின்றது. ஆனால், ஐ.ஓ.சி. நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்காவே தொடர்ந்து எரிபொருளை அனுப்பிக்கொண்டி ருக்கின்றது. வாழ்நாள் முழுக்க ஐ.ஓ.சியில் வாடிக்கையாளராக இருந்த ஒருவர் இப்போது அங்கே தனக்கு தேவையான பெற் றோலை பெறமுடியாமல் இருக்கிறார்.

மோட்டார் சைக்கிள்கள் ஒரு பக்க வீதியிலும் மற்றைய வாகனங்கள் இன்னுமொரு பக்கமாகவும் வரிசையில் நிற்கின்றன.

நேற்று முதல் இவ்வாறு வரிசையில் நிற்கின்றவர்களில் முதல் நாநூறு ஓட்டோக்கள், நூறு கார்கள், ஆயிரம் மோட்டார் சைக்கிள்களின் வாகன இலக்கங்கள் பதியப்பட்டு எரிபொருள் அந்த ஒழுங்கில்

வழங்கப்படும். அதேவேளை, அதற்கு மேலாக நிற்கும் வாகனங்களின் இலக்கம், வாகன உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் என்பன பதியப்பட்டு அவர்களுக்கு அடுத்த முறை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் வழங்கும்போது முதல் நாளே குறுஞ்செய்திச் சேவை ஊடாக தகவல் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தினசரி இவ்வாறு எரிபொருளுக்காக புதிய புதிய நடைமுறைகளை அறிமுகம் செய்துகொண்டிருக்கின்றார்கள் நமது அதிகாரிகள்.

அத்தியாவசிய சேவைக்காக ஆங்காங்கே சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நடக்கின்ற திருக்கூத்தக்கள் கொஞ்சமல்ல.!

- ஊர்க்குருவி

# இன்றைய போராட்டம் தொடர்பில் ஜே. ஆரை உதாரணம் கூறிய ரணில்!

கொழும்பு, ஜூலை 09

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்ற நிலையில் மக்களின் எதிர்ப்பு போராட்டங்களும் வலுப்பெற்று வருகின்றன. இவ்வாறனதொரு சூழ்நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு வலியுறுத்தி கொழும்பு - காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப் பட்ட தன்னெழுச்சி போராட்டம் இன்று சனிக்கிழமையுடன் 3 மாதங்கள் நிறைவடைகின்றன.

இதனை முன்னிட்டு இன்று காலிமுகத்திடல் பெரும் ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ள ஏற்பாட்டாளர்கள், போராட்டத்துக்கு ஆதரவாக கொழும்புக்கு வருமாறு மக்களுக்கு அழைப்பும் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் நெருக்கடிகளை கொடுக்கும் வகையில் அமைந்துள்ள இந்த போராட்டம் கட்டுப்படுத்த பல முயற்சிகள் திரைமறையில் எடுக்கப்பட்டாலும் அவை சாத்தியப்படுவதாக தெரியவில்லை.

இவ்வாறான நிலையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர் பாராளுமன்றத்தில் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இன்று சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் குறித்து வினாவியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்திலும் பெரும் போராட்டமும் வேலை நிறுத்தமும் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. இன்றைய சூழலை போன்றே அன்றும் கொழும்புக்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவே தீர்மானித்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு முதல் நாள் இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்கள் சங்கத்தை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அழைத்தார். நாளை போராட்டத்தில் நீங்களும் பங்குபற்றுவீர்களா என ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களிடம் கேட்டார்.

பதற்றத்துடன் அவர்கள் இல்லை என்றனர். இல்லை நீங்களும் அதில் போராட்டத்தில் பங்குபற்றுவீர்கள் என கூறிவிட்டு ஜனாதிபதி ஜே. ஆர். அவ்விடத்திலிருந்து சென்று விட்டார்.

மறுநாள் போராட்டத்துக்கு ஆதரவாக இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்கள் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது. பேருந்துகள் சேவையில் இல்லை. இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கொழும்புக்கு வர முடியாது போனது என தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த கதை இன்றைய சூழலுக்கு பொருந்தாது என குறிப்பிட்டார்.

(ஐ)

# நாட்டிலிருந்து இந்த வருடம் மட்டும் 1,486 மருத்துவர்கள் வெளியேறினர்!

கொழும்பு, ஜூலை 09

நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடம் முதல் 6 மாதங்களில் மட்டும் 1486 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இலங்கை மருத்துவ பேரவையின் தரவுகளின் பிரகாரம், இந்த வருடம் ஜனவரி மாதம் 138, பெப்ரவரியில் 172, மார்ச் 198, ஏப்ரல் 214, மே 315, ஜூன் 449 மருத்துவர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இவர்கள் இலங்கை மருத்துவ பேரவையிடமிருந்து நற்சான்றிதழ் பத்திரத்தை பெற்று இவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

(ஐ)

## 3 மணித்தியால மின்வெட்டு 15ஆம் திகதி வரை நீடிக்கும்!

கொழும்பு, ஜூலை 09

மின் உற்பத்திக்கு போதிய எரிபொருள் மற்றும் தண்ணீர் இன்மையால், தற்போது நடைமுறையிலுள்ள 3 மணிநேர மின்வெட்டை எதிர்வரும் 15ஆம் திகதி வரை நீடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

இதன்படி, எதிர்வரும் ஏழு நாட்களுக்கு 3 மணித்தியாலங்கள் மின்சாரம் தடைப்படும்.

ஏ, பி, சி, டி, ஈ, எவ், ஜி, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் காலையில் ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்களும் இரவில் ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படும்.

அத்துடன் எம், என், ஒ, எக்ஸ், வை, இசற் ஆகிய வலயங்களில் காலை 5.30 மணி முதல் காலை 8.30 மணிவரை மின்துண்டிப்பு இடம்பெறும்.

மேலும், கொழும்பு முன்னுரிமை வலயங்களில் காலை 6 மணி முதல் 8.30 மணிவரை மின்துண்டிக்கப்படும்.

## அரசுக்கு எதிரான போராட்டம் பிரதமரின் கட்சியும் ஆதரவு!

கொழும்பு, ஜூலை 09

இன்று சனிக்கிழமை நாடு முழுவதும் நடத்தப்படவுள்ள அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் பதவி விலகல் உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பில் நடத்தப்படவுள்ள அமைதிப் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதாக அறிக்கை மூலம் வெளிப்படுத்தியுள்ளது அந்தக் கட்சி.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதையும் வன்முறைச் சம்பவங்களைத் தவிர்ப்பதையும் உறுதிசெய்ய வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, போராட்டங்களின் போது மிகுந்த நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு பொலிஸார் மற்றும் படைத் தரப்பினரையும் அந்தக் கட்சி கேட்டுள்ளது.

(ஐ)

## யாழ்ப்பாணத்தில் நேற்று விழிப்புணர்வு போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 09

போதையற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற விடயத்தை வலியுறுத்தி நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மணியந்தோட்டத்தில் விழிப்புணர்வு போராட்டம் இடம்பெற்றது.

கரித்தாஸ் கியூரெக் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டு அமைப்பால் இந்த விழிப்புணர்வுப் போராட்டம் இடம்பெற்றது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
09.07.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆணி 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# போகுமிடம் தெரியாத பயணம்?

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைமை, கிட்டத்தட்ட போகுமிடம் தெரியாமல் பயணம் செய்ய முற்படும் ஒருவரின் நிலைக்கு ஒப்பானதாகும். ஏனெனில், எதனை செய்வதென்று தெரியாமல் அவர் செயலபடுகின்றார். பஸில் ராஜபக்ஷவின் இடத்துக்கு தொழிலதிபர் தம்மிக பெரேராவை நியமித்து, அவரை அமைச்சராகவும் நியமித்திருக்கின்றார். பதவியைப் பொறுப்பேற்ற தம்மிக பெரேராவோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று கூறுகின்றார். இதனைத் தொடர்ந்து தம்மிகவை அமைச்சுப் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று, ரணில் தற்போது, ஜனாதிபதியிடம் கோரியிருக்கின்றார்.

மக்களின் பிரச்னைகளை தீர்க்க முடியாமல் தடுமாறும் ஓர் அரசாங்கத்துக்குள் இவ்வாறான உள்சிக்கல்கள் தேவைதானா? அரசாங்கத்தை கொண்டுநடத்த முடியாதவொரு சூழலில்தான், ஜனாதிபதி, ரணிலிடம் அடைக்கலம் தேடினார். இப்போது அவர் நியமித்திருக்கும் பிறிதொருவர் ரணிலை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று கூறுகின்றார். இவ்வாறானதொரு சூழலில் எவ்வாறு, வெளிநாடுகள் இலங்கைக்கு உதவுவதற்கு முன்வரும்? சர்வதேச நாணய நிதியம் எவ்வாறு நாட்டை நோக்கும்? இது தொடர்பில் ஜனாதிபதி கவலைப்படுதாகத் தெரியவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷ பதவியை அமர்த்தியவர்களில் பலர் தற்போது பதவியில் இல்லை. ஒருவர் சரிவராத போது இன்னொருவரைக் கொண்டு பிரச்னைகளை சமாளிக்க முற்படும் கையறுநிலையில்தான் கோட்டாபய ராஜபக்ஷ இருக்கின்றார். ஆனால், அவரின் நியமனங்களால் எந்தவொரு மாற்றங்களையும் காண்பிக்க முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், தம்மிக பெரேராவை அமைச்சராக நியமித்திருக்கின்றார். அது உள் சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

மக்கள் ஜனாதிபதியின்மீதும் அரசாங்கத்தின்மீதும் முற்றிலுமாக நம்பிக்கையிழந்து விட்டனர். இந்த நிலையில், தோல்வியை ஒப்புக்கொண்டு பதவியிலிருந்து விலகுவதுதான் சரியானது. ஆனால், பதவி விலகுவதை ஜனாதிபதி ஒரு தெரிவாகக் கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாகவே, போராட்டங்கள் தொடர்கின்றன. "கோட்டா கோ ஹோம்" என்பது ஆரம்பத்தில் ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் சுலோகமாக மட்டுமே இருந்தது. ஆனால், இப்போது பெரும்பாலானவர்களின் கோரிக்கையாக மாறியிருக்கின்றது. பதவியில் இருக்க வேண்டுமென்னும் நிலைப்பாட்டை கொண்டிருக்கும் ஜனாதிபதியிடம் எந்தவிதமான திட்டங்களும் இல்லாமல் இருப்பதுதான் சிக்கலானது. நெருக்கடியை சமாளிப்பதற்கான எந்தவொரு திட்டமும் இல்லாதபோது, பதவியில் இருப்பதற்கான நியாயங்களும் இல்லாமல் போய்விடுகின்றது. ஆனாலும் அவர் பதவியிலிருந்து விலக விரும்பவில்லை.

பிரச்னைகளைத் தீர்க்க முடியாத இடைவெளியில் போராட்டங்களுக்கான வாய்ப்புக்களே அதிகரித்து வருகின்றது. ஆனால், இவ்வாறான போராட்டங்கள் சரியானதொரு தலைமைத்துவத்தின் கீழ் நெறிப்படுத்தப்படாதபோது, அவைகள் 'லும்பன்' வன்முறைகளாகவும் மாறுவதற்கான வாய்ப்புக்களே அதிகரித்து வருகின்றன. பிரச்னைகள் இந்தளவுக்கு சிக்கலாக இருக்கின்றபோது, அரசியல் மோதல்களில் ஈடுபடுவதானது, அரசாங்கத்தில் உள்ளவர்களின் பொறுப்பற்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றது. நாடு இந்தளவுக்கு அதலபாதாளத்திற்கு நகர்ந்ததற்கு, ராஜபக்ஷக்களின் அதிகார மோக அரசியலே பிரதான காரணமாகும். இதற்குப் பின்னாலும் திருந்தாவிட்டால், இந்த நாட்டை பௌத்த மதபீடங்கள் விரும்புகின்ற கடவுள்களாலும் காப்பாற்ற முடியாது. அண்மையில், அஸ்கிரிய பீடாதிபதி நாட்டைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கூறியிருந்தார்.

சிறீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில், "நாடு எரிமலையின் மீதிருக்கின்றது – அது எப்போதும் வெடித்துச் சிதறலாம்", என்றார். உண்மையில், இன்றைய நிலைமையோ அவ்வாறான எதிர்வுகூறலையும் விடவும் பாரதூரமானது. ஏனெனில், ஏற்கனவே எரிமலை வெடித்துவிட்டது. அதனை எவ்வாறு சரிசெய்வது – சரிசெய்ய முடியுமா என்னும் நிலையில்தான் இன்றைய நிலைமையிருக்கின்றது. ஆனால், இப்போது கூட, பொறுப்பற்ற வகையிலேயே ஆட்சியாளர்கள் செயல்படுகின்றனர்.

# உச்சத்தை தொடும் 'கோட்டா கோ ஹோம்' கோஷம்!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையின் அரசியல் வரலாற்றில் எந்தவொரு ஜனாதிபதியும் சந்தித்திராத அவமானத்தை பாராளுமன்றத்தினுள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்திருந்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி பாராளுமன்றம் வந்திருந்தார். அந்தச் சமயம் எதிர்தரப்பிலிருந்து அவரை நோக்கி தற்போது இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்து வருகின்ற 'கோட்டா கோ ஹோம்' என்ற கோஷம் நேரடியாகவே அவரை நோக்கி எழுப்பப்பட்டிருந்தது. இந்தக் கோஷம் வலுவடையவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அருகே அமர்ந்திருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாராளுமன்றத்திலிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார். பாராளுமன்றிலேயே ஜனாதிபதிக்கு எதிராக கோஷம் எழுப்பப்பட்டமை அவருக்கெதிரான எதிர்ப்பலை உச்சத்தைத் தொட்டுள்ளதையே சுட்டிக்காட்டுகின்றது.

கடந்த மே மாதம் ஆரம்பித்த 'கோட்டா கோ கோஷம்' தற்சமயம் பேரொலியாக நாடு தழுவிய ரீதியில் எதிரொலித்து வருகின்ற நிலையில் இன்று சனிக்கிழமை தலைநகர் கொழும்பையே ஸ்தம்பிக்க வைத்து அதனை நாடளாவிய ரீதியில் பிரதிபலிக்கவே ஆரப்பாட்டங்களை ஏற்பாடு செய்தோர் திடசங்கற்பம் கொண்டுள்ளனர்.

இன்று கொழும்பில் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டம் தடுக்கப்படலாம். ஊரடங்கு போடப்படலாம். ஆர்ப்பாட்டக்காரர்கள்மீது தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற பேச்சுக்களும் பலமாகவே அடிபடுகின்றது. இருந்தபோதிலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டால் நிலைமை மோசமடையலாம் என்பதையும் பாதுகாப்பு தரப்பினர் அறிந்து வைத்துள் ளனர். 'சூடு கண்ட பூனை அடுப்பங் கரைப்பக்கம் போகாது' என்பது போல ஏற்கனவே மே மாதம் 9ஆம் திகதி காலி முகத்திடலில் அமைந்துள்ள 'கோட்டா கோ கம' ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்க முற்பட்டதன் பின் விளைவுகளை நாடு பெரிதும் அனுபவித்து வருகின்றது.

பாரளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது சொத்துக்கள், உடைமைகளை இழந்து பின்னடைவுகளைக் கண்டுள்ளனர். அத்துடன், இன்றைய ஆர்ப்பாட்டத்துக்கு கட்டியம் கூறுவதுபோல முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர இடைவிடாது கடந்த சில தினங்களாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராகக் கோஷமெழுப்பி வருகின்றார்.

பௌத்த குருமார்களும் தமது எதிரப்பை படிப்படியாக வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர். இம்மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென பௌத்த மகா சங்கத்தினரின் தேரர்களின் அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. எனவே, ஜனாதிபதி தொடர்ந்தும் பதவியிலிருக்கின்ற நிலையில் பௌத்த மகா சங்கத்தினரின் எதிர்ப்பும் படிப்படியாக வலுவடையும் என்றே எதிர்பார்க்க முடியும்.

இன்றைய ஆர்ப்பாட்டத்தை எடுத்து




நோக்கும்போது ஏறத்தாழ லிபியா, அல்ஜீரியா, ஈராக் ஆகிய நாடுகளில் ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கு வழியமைத்த 'அரபு வசந்தம்' போன்ற நிலையே இலங்கையில் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கின்றதெனக் கருத முடியும்.

இலங்கையில் இன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிராக வலுத்து வருகின்ற எதிர்பலையை நோக்கும் போது இலங்கை ஆர்ப்பாட்டங்களை 'இலங்கை வசந்தம்' என்று அழைத்தால் கூட தவறில்லை என்றே கருதலாம்.

பொருளாதார ரீதியாக ஒரு வரட்சியான நிலையில் இருப்பதோடு கடனாளியாகவும் சர்வதேச சமூகத்தினால் இலங்கை பெரிதும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.


இன்றைய ஆர்ப்பாட்டத்தின் போது அரச தரப்பினரின் பலதரப்பட்ட அடக்கு முறைகளுக்கெதிராகவும் குரல் எழுப்பப்படுமென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. ஊடகவியலாளர்களுக்கு எதிரான சவால்கள், அண்மைக்காலங்களில் படைத்தரப்பினரின் அத்துமீறல்கள், அத்துடன் பரந்துபட்ட முறையில் இடம்பெற்று வரும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இன்றைய ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என்றே எதிர்பார்க்க முடியும்.

தற்போது தலைநகர் கொழும்பிலும் புறநகர் பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்ற ஆர்ப்பாட்டங்கள் , பேரணிகளை தடுத்து நிறுத்த பொலிஸார் கொழும்பு நகரிலுள்ள நீதிவான் நீதிமன்றங்களை நாடி வருகின்றனர். ஆனால், கொழும்பு நகர நீதிவான்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்துவது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை எனத் தெரிவித்து பொலிஸாரின் வேண்டுகொளை நிராகரித்துள்ளனர்.

அமைதியான ஆர்ப்பாட்டங்களை கடந்த காலங்களில் அடக்க முற்பட்டதன் காரணமாகவே வன்முறைகள் வெடித்திருந்தன. எனவே, இதனை கருத்தில் கொண்டே கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான்கள் பொலிஸாரின் கோரிக்கைகளை நிராகரித்து வருகின்றனர்.

இதன் மூலம் "சிலரை சிலகாலம் ஏமாற்றலாம் எல்லோரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது" என்ற செய்தியை நீதித்துறையும் தனது தீர்ப்புகள் மூலமாக அரசு தரப்புக்கு வெளிப்படுத்தியுள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
திட்டமிட்ட செயல்களை எண்ணியபடி செய்து முடிப்பீர்கள். யோகமான நாள். நண்பர்களின் ஆதரவுடன் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நிதிநிலை உயரும். கூட்டுத்தொழில் முயற்சி ஆதாயமாகும்.

**இடபம்**
எதிர்ப்புகளை சரி செய்து முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விஐபிகளின் உதவியுடன் உங்கள் எண்ணத்தை நிறைவேற்றி ஆதாயம் அடைவீர்கள். எதிரிகள் பணிவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். முயற்சிகள் வெற்றியாகும் நாள். எதிர்பாராத வருவாய் உண்டு. நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**கடகம்**
செயல்களில் அலைச்சல், செலவுகள் அதிகரிக்கும் என்றாலும், உங்கள் விருப்பம் நிறைவேறும். மாற்று இனத்தவர்களின் உதவியுடன் தொழிலை விரிவு செய்வீர்கள்.

**சிம்மம்**
மேலதிகாரியின் ஆதரவுடன் நீங்கள் விரும்பிய பணியிட மாற்றத்தை அடைவீர்கள். பண வரவு திருப்தி தரும். விரும்பிய பொருட்களை வாங்குவீர்கள்.

**கன்னி**
கருத்து வேறுபாட்டால் விலகிச் சென்றவர்கள் மீண்டும் உங்களை தேடி வருவர். திட்டமிட்ட செயல்கள் எளிதாக நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும்.

**துலாம்**
மனம் மகிழும்படியான சம்பவம் நடைபெறும். உங்களின் எண்ணம் நிறைவேறும். குடும்பத்தினரின் தேவையை அறிந்து செயல்படுவீர்கள். தொழிலில் ஆதாயம் காண்பீர்கள்.

**விருட்சிகம்**
வெளியூர் பயணம் வெற்றி தரும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்களில் சிலர் வேறு இடத்திற்கு மாறுதல் கேட்பீர்கள். குரு அருளால் உங்களது எண்ணம் நிறைவேறும்.

**தனுசு**
தொழில் முன்னேற்றம் கருதி நீங்கள் எடுக்கும் முயற்சி லாபமாகும். நிதி நெருக்கடி விலகும். எதிர்பார்த்த பணம் இன்று வந்து சேரும். நீண்ட நாள் எண்ணம் ஒன்று நிறைவேறும்.

**மகரம்**
எடுத்த முயற்சிகள் வெற்றியாகும். பகைவர்கள் விலகிச் செல்வர். பொறாமையாளர்கள் உங்களது முன்னேற்றத்தை கண்டு விமர்சனம் செய்வர். அதைப் பொருட்படுத்தாதீர்.

**கும்பம்**
இரண்டு நாளாக இருந்த நெருக்கடி விலகும். நினைத்ததை அடைவீர்கள். புதிய முயற்சிகள் நன்மையாகும். தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை.

**மீனம்**
செயலில் சங்கடத்தை சந்திப்பீர்கள். சந்திராஷ்டமம் தொடர்வதால் அமைதியைக் கடைபிடியுங்கள். பணியிடத்தில் மேலதிகாரியின் கோபத்திற்கு ஆளாவீர்கள். கவனம் தேவை. செயலில் தடை ஏற்படும்.

# தமிழ்நாட்டைப் பிரித்தாலும் இரண்டிலும் தி.மு.க. ஆட்சியே

## அமைச்சர் பெரியசாமி

சென்னை, ஜூலை 09

தமிழகத்தை இரண்டாகப் பிரித்தாலும், இரண்டிலும் தி.மு.கதான் ஆட்சி செய்யும் என அமைச்சர் ஐ. பெரியசாமி தெரிவித்தார்.

திண்டுக்கல்லில் நிகழ்வு ஒன்றின்பின் செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழகத்தை இரண்டாகப் பிரிப்பது தொடர்பாக பா. ஜ. க. சட்டமன்ற உறுப்பினர் நயினார் நாகேந்திரன் தெரிவித்த கருத்து குறித்து கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், 'தமிழகத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பது நயினார் நாகேந்திரனின் ஆசையாக இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டை இரண்டாகப் பிரித்தாலும் தி.மு.கதான் இரண்டிலும் ஆட்சி செய்யும்", என்றார். (ஐ)

# சுயநலத்துக்காக அ.தி.மு.கவை இன்று கூறுபோடுகின்றார்கள்!

## சசிகலா குற்றச்சாட்டு

விழுப்புரம், ஜூலை 09

"தனிப்பட்ட சுயநலத்திற்காக கட்சியை கூறுபோடுகிறார்கள். கட்சித் தலைமை என்பது சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். 'நான் பெரியவன், நீ பெரியவன்' என்ற சண்டை கட்சியை அழிவுப் பாதைக்கு கொண்டு செல்கிறது - என்று சசிகலா தெரிவித்துள்ளார்.

தமிழகம் முழுவதும் மக்களை சந்திப்பதற்காக சசிகலா சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகின்றார். நேற்று முன்தினம் அவர் விழுப்புரம் சென்றிருந்தார்.

அங்கு அவர் உரையாற்றுகையில்,

"ஜெயலலிதாவுடன் இருந்த நட்பு உண்மையானது; புனிதமானது. நாங்கள் எண்ணங்களால், சிந்தனையால் ஒன்றுபட்டோம். அதனால்தான் இந்த இயக்கத்தை நம் அரசியல் எதிரிகள் பொறாமைப்படும் அளவுக்குக் கொண்டுவர முடிந்தது.



ஜெயலலிதாவை அப்புறப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்தன. நாம் கூட்டணி இல்லாமல் வெற்றி பெற்றோம்.

தொடர் வெற்றிகளை பெற்ற இயக்கம், தற்போது தொடர் தோல்விகளை சந்தித்து வருகிறது. எத்தனையோ இன்னல்களை நானும், ஜெயலலிதாவும் அனுபவித்தோம். ஜெயலலிதாவை அரசியலில் இருந்து அப்புறப்படுத்தி விடலாம் என்று அரசியல் எதிரிகள் போராடித் தோற்று போனார்கள். இப்போது தனிப்பட்ட சுயநலத்திற்காக கட்சியை கூறுபோடுகிறார்கள். கட்சித் தலைமை என்பது சட்ட விதிகளுக்கு உட்பட்டு இருக்கவேண்டும். 'நான் பெரியவன், நீ பெரியவன்' என்ற சண்டை கட்சியை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்கிறது என்று தொண்டர்கள் வருத்தப்படுகிறார்கள்.

எந்தக் கட்சிக்கு எதிராக எம். ஜி. ஆர், ஜெயலலிதா இருவரும் பாடுபட்டனரோ, அந்தக் கட்சிக்கு எதிராகக் குரல் கொடுக்காமல் இப்போது உள்ளனர். 35 ஆண்டுகள் ஜெயலலிதாவுடன் பயணித்தவள் என்பதாலும், கட்சியின்மீது உள்ள அபிமானத்தாலும் 'கட்சியின் தலைமையை ஏற்க வேண்டும்' என்ற தொண்டர்களின் வேண்டுகோளை ஏற்றுதான் இப்போது உங்களை சந்தித்து வருகிறேன். உங்களின் ஆதரவு எனக்கு நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது. என் இறுதி மூச்சுவரை தமிழக மக்களுக்காக பாடுபடுவேன் - என்றார். (ஐ)

# நடிகர் விக்ரம் மருத்துவமனையில்!

சென்னை, ஜூலை 09

நடிகர் விக்ரம் திடீர் உடல் நலக் குறைவால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ் திரையுலகின் முக்கிய நடிகராக வலம் வருபவர் நடிகர் விக்ரம். 1990இல் வெளியான 'என் காதல் கண்மணி' படத்தின் மூலம் தமிழ்த் திரை இரசிகர்களுக்கு அறிமுகமானவர். இயக்குநர் பாலாவின் 'சேது' தொடங்கி பல்வேறு படங்களில் வித்தியாசமான கதாபாத்திரங்களின் மூலம் ரசிகர்களின்



கவனத்தை ஈர்த்தவர்.

அவர் மணிரத்னம் இயக்கத்தில் நடித்துள்ள பொன்னியின் செல்வன் படத்தின் டீசர் நேற்று வெளியாகவிருந்த நிலையில், திடீரென சுகயீனமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கடும் காய்ச்சல் காரணமாக நேற்று முன்தினம் இரவு தீவிர சிகிச்சை பிரிவில் விக்ரம் சேர்க்கப்பட்டார் என்றும், நேற்று காலை அவர் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டார் எனவும் அவர், வழமைக்கு திரும்பியுள்ளார் எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# ஜனவரி - மே வரையுமே ஜல்லிக்கட்டு நடத்தலாம்!

## தமிழக அரசு அறிவிப்பு

மதுரை, ஜூலை 09

ஜனவரி முதல் மே மாதம் வரையுமே மட்டுமே ஜல்லிக்கட்டு விளையாட்டை நடத்தலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

ஆண்டுதோறும் ஜனவரி முதல் மே மாதம் வரையே ஜல்லிக்கட்டு, வட மாடு, மஞ்சு விரட்டு நடத்த முடியும் என அரசு அறிவித்துள்ளது.

ஜனவரி முதல் மே மாதம் வரையே ஜல்லிக்கட்டு, வடமாடு, மஞ்சுவிரட்டு போட்டிகள் நடத்த ஆட்சியர் அனுமதி வழங்க இயலும் என விதிமுறையில் உள்ளது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக அரசின் விளக்கத்தை ஏற்று மதுரை பள்ளப்பட்டியில் ஸ்ரீ முத்தாலம்மன் கோயில் திருவிழாவில் வடமாடு மஞ்சு விரட்டுக்கு அனுமதி கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டது. (ஐ)

# எரிபொருள் வரிசையில் இரு குழுக்கள் மோதல்

## *25 வயது இளைஞர் ஒருவர் உயிரிழப்பு - மூவர் காயம்!*

கொழும்பு, ஜூலை. 09

எரிபொருளுக்காக வரிசையில் நின்றிருந்த இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மூவர் காயமடைந்துள்ளனர்.

இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலி - மாகல்ல எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் வரிசையில் காத்திருந்த இரு குழுக்களுக்கு இடையிலேயே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த மூன்று பேர் கராபிடிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, எரிபொருளுக்காக காத்திருந்த போது சுகயீனமுற்று இரு முதியவர்கள் நேற்று உயிரிழந்திருந்த நிலையில் எரிபொருள் வரிசையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற 3ஆவது உயிரிழப்பு சம்பவமாக இது பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிளிநொச்சியில் கைவிடப்பட்டுள்ள காணிகளில் விவசாய நடவடிக்கை

## *முன்வரும் விவசாயிகளுக்கு உதவ நடவடிக்கை!*

கொழும்பு, ஜூலை. 09

**கைவிடப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கைக்காக முன்வரும் விவசாயிகளுக்கு உதவ நடவடிக்கை என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.**

இந்தக் கலந்துரையாடல் நேற்று முன் தினம் பிற்பகல் 3.30 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில், பிரதேச செயலாளர், சமுர்த்தி உதவி ஆணையாளர், நீர்பாசன பொறியியலாளர், விவசாய திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் குறிப்பிடுகையில்-

மாவட்டத்தில் உணவு தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கைவிடப்பட்ட அல்லது பராமரிப்பற்ற காணிகளில் விவசாயம் செய்ய முன்வரும் விவசாயிகளை நாம் வரவேற்கின்றோம்.

அவர்களுக்கு தேவையான விதை தானியம் உள்ளிட்டவற்றை வழங்க சர்வதேச மற்றும் உள்ளூர் நிறுவனங்கள் தயாராக உள்ளன.

எமது மாவட்டத்திற்கான உணவு தேவையை பூர்த்தி செய்வதற்கு உள்ளூர் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

அதற்காக விவசாயிகள் முன்வர வேண்டும். அதற்காக உதவ தயாராக உள்ளோம்-என்றார். (அ)

# 2,3 நாட்களில் பேக்கரித் தொழில் முற்றாக வீழ்ச்சியடையும் அபாயம்

கொழும்பு, ஜூலை. 09

இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் பேக்கரி தொழில் முற்றாக வீழ்ச்சியடையும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள 50 வீதமான பேக்கரிகள் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேக்கரி உற்பத்திக்குத் தேவையான எதையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இன்றைய நிலையில் பேக்கரிகளுக்கு தேவையான எரிபொருளை வழங்குவதற்கான எந்த திட்டத்தையும் யாரும் தயாரிக்கவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

பேக்கரி உரிமையாளர் முற்றிலும் ஆதரவற்றவர்களாக இருக்கின்றனர் எனவும் அகில இலங்கைப் பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்தார்.

அத்துடன், இது தொடர்பில் அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# நாட்டின் எதிர்காலம் கருதி இன்று ஓரணி சேர்வோம்

## *பழனி திகாம்பரம் அழைப்பு*

கொழும்பு, ஜூலை. 09

“நாட்டின் எதிர்காலம் கருதி நாளை 9ஆம் திகதி அனைவரும் ஓரணி சேர்வோம். மக்களை வதைக்கும் சக்திகளுக்கு ஒற்றுமையால் தக்க பாடம் புகட்டுவோம்.”

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இணைத்தலைவரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவருமான பழனி திகாம்பரம் எம்.பி. அழைப்பு விடுத்துள்ளார்.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாளை நாடெங்கும் நடைபெறும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் தனது முகநூல் பக்கத்தில் திகாம்பரம் எம்.பி. இவ்வாறு பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார். (அ)

# உரக் கப்பல் இன்றிரவு நாட்டுக்கு வந்துசேரும்

கொழும்பு, ஜூலை. 09

40,000 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று இன்று இரவு இலங்கையை வந்தடைய உள்ளது.

குறித்த கப்பலுக்கு மேலதிகமாக மேலும் 25,000 மெற்றிக் தொன் உரங்கள் அடுத்த இரண்டு நாட்களில் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், உரக் கப்பல் நாட்டை வந்தடைந்தவுடன் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் உர விநியோகம் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# திங்கட்கிழமை நள்ளிரவு முதல் ரயில் கட்டணங்களும் உயர்வு

## *குறைந்தபட்ச கட்டணம் 20 ரூபா*

கொழும்பு, ஜூலை. 09

எதிர்வரும் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் ரயில் கட்டணங்களை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அச்சிடுவதற்காக அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகமா அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இதன்படி, ரயில் கட்டணத்தை தற்போதைய பஸ் கட்டணத்தில் பாதி அளவிலும் பார்க்க குறைந்த கட்டணத்தில் அதிகரிக்க முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய குறைந்தபட்ச கட்டணம் பத்து ரூபாவிலிருந்து இருபது ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# வங்கிகளில் கடன்களை பெற்ற வாடிக்கையாளர்களுக்கு சலுகை

கொழும்பு, ஜூலை. 09

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வங்கிக் கடன்களை செலுத்த முடியாதுள்ள வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

6 மாதத்துக்கு இரு தடவைகளாக அவற்றை செலுத்துவதற்கான வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு மத்திய வங்கியினால் வங்கிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க கடனை மீளச் செலுத்துவதற்கு ஆறு மாத கால சலுகை வழங்குவது, முறைப்படியான செயற் திட்டத்தின் மூலம் வங்கிக் கடனை அறவிடுவதற்கு வழங்கப்பட்டுள்ள காலத்தை நீடிப்பது, மற்றும் செயற்படாத கடனைச் செலுத்தவுள்ளோரின் பட்டியலில் உள்ளோர் புதிய கடன்களைப் பெற்றுக் கொள்ளும்போது கடன் தகவல் பிரிவில் சலுகையுடனான மதிப்பீடுகளை மேற்கொள்வது தொடர்பிலும் மத்திய வங்கியினால் ஏனைய வங்கிகளுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# வவுனியாவில் சிறுபோக செய்கையை அறுவடை செய்ய முடியாத நிலைமை

வவுனியா, ஜூலை. 09

வவுனியாவில் சிறுபோக நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளபோதும், டிப்பர் வாகனங்களுக்கு எரிபொருள் கட்டுப்பாடுகளை வழங்க மாவட்ட செயலக அதிகாரிகள் தயக்கம் காட்டுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் மற்றும் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர ஆகியோரின் இணை தலைமையில் அவசர கூட்டம் ஒன்று மாவட்ட செயலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதன்போது, தற்போது கட்டுமாண மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளதால் டிப்பர் வாகனங்களுக்கு டீசல் தேவை இருக்காது. அபிவிருத்தி அல்லது கட்டுமானப் பணி நடைபெறுகின்றது என்பதை சம்மந்தப்பட்ட திணைக்களம் உறுதிப்படுத்தும் பட்சத்தில் குறித்த டிப்பர்களுக்கு டீசல் எரிபொருள் வழங்கலாம் எனவும் பல டிப்பர்கள் டீசல் எரிபொருளை பெற்று கறுப்புச் சந்தையில் விற்பனை செய்கிறார்கள் எனவும் குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட பலராலும் குற்றம் சாட்டப்பட்டது. இதனால் தேவைக்கேற்ற டிப்பர்களுக்கு டீசல் வழங்குமாறும் ஏனைய டிப்பர்களுக்கு வழங்குவதை தற்காலிகமாக நிறுத்தி விவசாய அறுவடைக்கு தேவையான டீசலை வழங்குமாறும் கோரப்பட்டது.

அதனை மாவட்ட அரச அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை. டிப்பர்களுக்கு கட்டுப்பாடு போட அவர்கள் முன்வரவில்லை என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கூட்டத்தில் கலந்து கொண்ட எவருக்கும் தான் வெளியேறும் காரணத்தை கூறாது மேலதிக அரசாங்க அதிபர் இடை நடுவில் வெளியேறிச் சென்றிருந்தார். மாவட்ட அரசாங்க அதிபரும் டிப்பர் கட்டுப்பாடுகளை போட விரும்பவில்லை. எனவே மாவட்ட செயலகம் சுயாதீன மாக இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதா என பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ)

# தம்மிக்கவை பதவியிலிருந்து உடனடியாக நீக்கவேண்டும்!

## பிரதமர் ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஜுலை 09

**அமைச்சரவை மரபுகளை மீறி தன் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்த தம்மிக்க பெரேராவை அமைச்சர் பதவியில் இருந்து உடனடியாக நீக்க வேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.**

இது தொடர்பான தனது நிலைப்பாட்டை பிரதமர், ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குத் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடம், உரிய திட்டம் இல்லை எனவும் , நிதி அமைச்சர் பதவியில் இருந்து அவர் விலக வேண்டும் எனவும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க



பெரேரா அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே அவரை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் பிரதமர் நேற்று முன்தினம் வலியுறுத்தியுள்ளார் என்று அறிய முடிகின்றது. (அ)

# கர்ப்பிணித் தாய்மார் அவதானம் வேண்டும்

கொழும்பு, ஜூலை. 09

தற்போது வேகமாகப் பரவி வரும் இன்புளுவன்சா வைரஸ், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தை பிரசவித்த தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதனால் மிகவும் அவதானமாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லெனாரோல் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்கள் முடிந்தவரை முகக் கவசம் அணியுமாறும், வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக மேலும் மக்கள் நெரிசல் மிகுந்த இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இந்த நாட்களில் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணரை சந்தித்து மருத்துவமனையில் அனுமதிக்கவும். தாயும் குழந்தையும் கூடிய விரைவில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டால், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்க தேவையான சிகிச்சை அளிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# எரிபொருள், எரிவாயு பிரச்னைக்கு தீர்வாக கரி உற்பத்தி முன்னெடுப்பு

கொழும்பு, ஜூலை. 09

எரிபொருள் மற்றும் எரிவாயு பிரச்னைக்கு தீர்வாக, அரச மரக் கூட்டுத்தாபனம் கரி உற்பத்தியை ஆரம்பித்துள்ளது.

அப்புறப்படுத்தப்பட்ட மரத் துண்டுகளை பயனுள்ள வகையில் பயன்படுத்தி கரியை உற்பத்தி செய்யுமாறு இதற்கு முன்னர் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, அரச மரக் கூட்டுத்தாபனத்துக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

ஒரு கிலோ 130 ரூபாய் என்ற விலையில் கரியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சுகயீனமுற்ற குழந்தையை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு எரிபொருள் இல்லை!

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த பெற்றோர்

கொழும்பு, ஜூலை. 09

சுகயீனமடைந்த தங்களது குழந்தையினை வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்ல எரிபொருள் இல்லாத நிலை யில், குழந்தையின் பெற்றோர் எரிபொருள் நிரப்பு நிலையத் தில் காத்திருந்த புகைப்படம் வைரலாகி வருகின்றது.



பண்டாரகம - பாணந்துறை வீதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

இதுகுறித்து அங்கு பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புத் தரப்பினரின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

எனினும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையில் எரிபொருள் கையிருப்பு இல்லாத நிலையில், எரிபொருள் வரும் வரை குழந்தை யின் பெற்றோர் எரி பொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த னர். இதன்போது அங்கிருந்தவர் களினால் எடுக்கப்பட்ட புகைப் படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது. (அ)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் குணபாலசுந்தரம்



**தோற்றம்** 30 - 03 - 1955 **மறைவு** 04 - 07 - 2022

யாழ். துன்மலை இளவாலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Gonesse ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் குணபாலசுந்தரம் அவர்கள் 04-07-2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பொன்னம்பலம் – பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், சிவப்பிரகாசம் – இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலர் அவர்களின் அன்புக் கணவரும்,சுதா, ஜெனி, சுதாகர், வினோதன் ஆகியோரின் அன்புத் தந்தை யும், வசிதரன், பாலச்சந்திரன், வாணி, விதுசா ஆகியோரின் அன்பு மாமாவும்,வானதி, பாரதி, அரத்தி, அருண், அர்வின், சாமினி, அபினாஸ், அஷ்வினி, அரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும்,சிவபாலசுந்தரம், கருணாபாலசுந்தரம், தர்மபாலசுந்தரம், இறச்சேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

*பார்வைக்கு:*
Wednesday, 06 Jul 2022 3:00 PM - 4:00 PM
Saturday, 09 Jul 2022 3:00 PM - 4:00 PM
Sunday, 10 Jul 2022 3:00 PM - 4:00 PM
Crématorium des joncherolles villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*கிரியை :*
Wednesday, 13 Jul 2022 9:30 AM - 1:30 PM
Crématorium des joncherolles villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

*தகனம் :*
Wednesday, 13 Jul 2022 1:30 PM
Crématorium des joncherolles villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**ஜெனி - மகள் :** Mobile : +33641729157
**வினோதன் - மகன் :** Mobile : +33646171691
**வதனா - பெறாமகள் :** Mobile : +33646772635

*தகவல் :*
**வினோதன் - மகன்**

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை



**பிறப்பு** 31 - 08 - 1933 **இறப்பு** 28 - 06 - 2022

யாழ். தென் புலோலியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா வேலுப்பிள்ளை 28-06-2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கந்தையா – லக்ஷ்மிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும்,குகாநந்தகுமார், சந்திரகுமார், சிவகுமார், வசந்தகுமாரி, ஜெயமோகனகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும்,இந்திராகாந்தி, நர்மதா, உதயசந்திரிக்கா ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான மாணிக்கம், தங்கம்மா, வினாசித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,சுரேக்கா – ஜோன், அருண் – டெமி, கீதா, மதுரா, மயூரன், விக்ரம், மதுஷா, விபிஷன், கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பாட்டியும், சோபியா, சியானா, சவானா, ஜக்சன், ஜோர்டன், மேய்ஷன், கைறொன், நீகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தொடர்புகளுக்கு :*
**சிவகுமார் - மகன் :** Mobile : +447947612604
**வசந்தா - மகள் :** Mobile : +447538016896
**மோகன் - மகன் :** Mobile : +447944612550

*தகவல் :*
**குடும்பத்தினர்.**

# போராட்டங்கள் தீவிரமடைந்தால் நாட்டை முடக்கும் முடிவில் அரசு?

கொழும்பு, ஜூலை. 09

**நாட்டினை முடக்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கொழும்பில் இன்று பல்வேறு தரப்பினரால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறிப்பாக ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக இன்று கொழும்பை முற்றுகையிட்டு பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால் பல்கலைக்கழக மாணவர்கள், எதிர்க்கட்சிகள், சிவில் அமைப்புகள், பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கொழும்பை நோக்கி வரவுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் குறித்த போராட்டங்கள் மோசமடையுமாக இருந்தால் நாட்டை முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# டொலர் செலுத்தி எரிபொருளை பெற முன்பதிவு செய்ய முடியும்

கொழும்பு, ஜூலை. 09

அத்தியாவசிய தேவைகளுக்காக டொலர் செலுத்தி எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளை பெற்றுக் கொள்ள விரும்பும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் அதற்காக முன்பதிவு செய்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதிவு செய்வதற்கான வசதிகள் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி-
https://ceypetco.gov.lk/usd-consumer-online-registration/

(அ)

# ஜனக ரத்நாயக்கவை விசாரிக்கவேண்டும்

## எரிசக்தி அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை. 09

எரிபொருள் விலை நிர்ணயம் மற்றும் கொள்வனவு குறித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோப் குழுவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நாட்டில் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 200 ரூபாவுக்கும் குறைவாக வழங்க முடியுமென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் சமீபத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மன்னாரில் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அக்கறையின்றி செயல்படுவதாக குற்றச்சாட்டு

மன்னார், ஜூலை. 09

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிபொருள் பிரச்னை நீடித்து வருகின்ற நிலையில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் இடையே அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய காதர் மஸ்தான் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் அவசர கலந்துரையாடல்களை மேற்கொண்டு எரிபொருள் பிரச்னைக்கான தீர்வை முன்வைக்கவில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களில் எரிபொருள் பிரச்னைகளை நிவர்த்தி செய்வதற்கான மற்றும் எரிபொருள் பங்கீடு தொடர்பான பல முன்னேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவர் அவற்றில் அக்கறையின்றிச் செயற்படுவதாகவும் அவர் எரிபொருள் பிரச்னை தொடங்கிய காலத்தில் இருந்து மன்னார் வருவதை தவிர்த்து வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம் பாராளுமன்ற உறுப்பினர் மஸ்தானுக்கு சொந்தமான பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்படுகின்றபோதும் அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூட மக்களுக்கு ஒழுங்கான எரிபொருள் வழங்கப்படுவதில்லை எனவும் நள்ளிரவில் வரும் எரிபொருள் இரவோடு இரவாக விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (அ)

# சுற்றுலாத்துறையில் மேலும் வீழ்ச்சி ஏற்படும் அபாயநிலை!

கொழும்பு, ஜூலை. 09

இலங்கையின் சுற்றுலாத் துறையில் மேலும் வீழ்ச்சி ஏற்படலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்து, நியூசிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், கனடா, அவுஸ்ரேலியா மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளின், இலங்கை தொடர் பான பயண நிலைப்பாடுகள் காரணமாகவே இவ்வாறு அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்தும், நியூசிலாந்தும் இலங்கைக்கு செல்வதற்கு எதிராக தங்கள் நாட்டு பிரஜைகளுக்கு புதிய எச்சரிக்கைகளை வழங்கியுள்ளன.

பொருளாதார நெருக்கடி மோசமடைதல் மற்றும் உள்நாட்டு அமைதியின்மைக்கான சாத்தியக்கூறுகள் என்பன இதற்கான காரணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதேநேரம், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், அவுஸ்ரேலியா, அயர்லாந்து ஆகியன, சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்ட பயண ஆலோசனைகளைத் தொடர்ந்து பேணி வருகின்றன.

எனவே இந்த நிலைப்பாடு, நாட்டில் ஏற்கனவே பின்னடைவைக் கண்டுள்ள சுற்றுலாத் துறையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என கருதப்படுகிறது.

எனினும் அத்தகைய எச்சரிக்கைகளின் தாக்கத்தை முடிந்தவரை 'மென்மைப்படுத்த' நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி சபையின் தலைவர் தெரிவித்தார். (அ)

# பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த மூன்று நிறுவனங்கள் தம்மிக்கவுக்கு

கொழும்பு, ஜூலை. 09

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் இருந்த சில நிறுவனங்கள் முதலீட்டு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இது தொடர்பான, அதி விசேட வர்த்தமானியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார்.

இதன்படி ரக்னா லங்கா நிறுவனம் செலந்திவ முதலீட்டு நிறுவனம் மற்றும் ஹொட்டல் டெவலப்பர்ஸ் லங்கா (தனியார்) நிறுவனம் என்பன அமைச்சர் தம்மிக்க பெரேரா தலைமையிலான முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. (அ)

# கர்ப்பிணி அரச உத்தியோகத்தருக்கு அருகில் உள்ள இடங்களில் பணி!

## பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 09

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் கடும் சிரமங்களை எதிர்நோக்கும் கர்ப்பிணி அரச உத்தியோகத்தர்களை அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையில் உள்ள வேறொரு சேவை நிலையத்துக்கு பணிக்கு நியமிக்கும் முறை நடைமுறைப் படுத்தப்படவேண்டும் எனவும், கர்ப்பிணி உத்தியோகத்தர்கள் அவ்வாறு நியமிப்பதில் ஏதேனும் இடையூறுகள் காணப்படுமாயின் தமது கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வீட்டிலிருந்தே இணையவழியில் தமது கடமைகளை செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டுமெனவும் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் கேட்டுள்ளது.

பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் தவிசாளர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# விமான சேவைகள் இரத்தாகாது

கொழும்பு, ஜூலை. 09

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஸ்ரீலங்கன் விமான சேவையின் பல விமான சேவைகள் இரத்து செய்யப்படலாம் என வெளியாகும் தகவல்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் மறுத்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு உச்சத்தை எட்டியுள்ள நிலையில், நிலைமையை நிர்வகிப்பதற்கு விமான அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு விமான நிலையங்களில் எரிபொருளைப் பெறுவதற்கு தொழில்நுட்ப நிறுத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய சில விமானங்களின் நேரம் மற்றும் கால அளவுகளில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும் என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில், திட்டமிடப்பட்ட விமான நடவடிக்கைகளை எந்தவித இடையூறும் இன்றி இயக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குறிப்பிட்டுள்ளது. (அ)

# அமெரிக்காவின் தடைகளால் இலங்கைக்கு பாதிப்பில்லை

கொழும்பு, ஜூலை. 09

ரஷ்யாவின் மசகு எண்ணெய் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளால் இலங்கைக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்கா வழங்கி வரும் ஆதரவு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகளுடன் இலங்கை எவ்வாறு இராஜதந்திர உறவுகளைப் பேண வேண்டும் என்பது தொடர்பில் அமெரிக்கா ஆலோசனை வழங்குவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், அது இலங்கை அரசாங்கத்தின் தீர்மானம் எனவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டார்.

ரஷ்ய மசகு எண்ணெய்க்கு அமெரிக்காவில் மாத்திரமே பொருளாதார தடைகளை விதித்துள்ளதாகவும், ரஷ்யாவிடம் மசகு எண்ணெயை வாங்குவது என்பது அந்த நாடுகளின் வேலை எனவும் அவர் கூறியுள்ளார். (அ)

ஈழநாடு



# உணவுப் பாதுகாப்பின்மையை குறைந்தபட்சம் உறுதிப்படுத்தல்



சா.செ.ச.இளங்கோவன்



தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்களின் வருமானம் பெறும் வழிமுறைகள் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதுடன் பல இடர்களை ஏற்படுத்தியுள்ளது. இந்த நெருக்கடி நிலையானது உணவைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்குமான வசதிகளை குறைத்துள்ளமையினால் இலங்கையானது உணவுப் பாதுகாப்பின்மை அபாயத்தினை எதிர்நோக்குகின்றது.

குறிப்பாக வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களை இது பாதிக்கின்றது. இக் கட்டுரையானது உரத் தட்டுப்பாடு, உற்பத்தி குறைவு, உற்பத்தி செலவு அதிகரிப்பு , உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, வருமானம் குறைவு என்பன பற்றி குறிப்பாக நாளாந்த ஊதியத்தினை பெறுபவர்களுக்கு எவ்வகையான செயற்பாடுகளை மேற்கொள்ளலாமென சுருக்கமாக கூறுகின்றது.

வடக்கு கிழக்கிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குள்ளிருப்பதனால் அவர்களுக்கு சொத்துக்கள் இல்லை. விவசாய காணிகளும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது. குறிப்பாக பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் போராளிகள், பல்வேறு சாதி மற்றும் வர்க்க வேறுபாட்டினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் போன்றன வளங்களை பெற்றுக்கொள்வதென்பது குறைவாகவே உள்ளது. நீண்டகால அழுத்தங்களினால் பாதிக்கப்பட்ட குழுவிற்கு தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது அதிர்ச்சியானதாகவும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு, உற்பத்தி செலவு அதிகரிப்பு, உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற சுமைகளையும் தாங்க வேண்டியுள்ளது.

ரூபாயின் பெறுமதி குறைவு மற்றும் அந்நிய செலாவணி குறைவு ஆகியவற்றினால் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துகள் போன்ற பொருட்களின் தட்டுப்பாடானது குடும்பங்களில் மேலும் அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது. கடந்த 6 மாதங்களில் உணவுப்பொருட்களின் விலை ரூ100 அல்லது அதற்கு மேல் அதிகரித்துள்ளது. அரிசி, பாண் மற்றும் பருப்பு போன்றவற்றின் விலை அதிகரிப்புக்கள் இதற்கு உதாரணங்களாகும்.



அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையினால் வெளியிடப்பட்ட இலங்கைக்கான மனிதாபிமான கோரிக்கையில் நாடளாவிய ரீதியில் 22 மில்லியன் மக்களில் 5 மில்லியன் மக்கள் உணவு பாதுகாப்பின்மையை எதிர்நோக்குகின்றார்கள். இவ் ஆய்வறிக்கையில் வடக்கில் யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணம் தேவையுள்ள அல்லது பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. இதற்கு போருக்குப் பிந்தைய சமூகங்கள் மற்றும் மலையகம் பேரிடர்களை எதிர்கொள்வதில் அதிக வலிமையுடன் சமாளிக்கும் உத்திகளையுடையவர்களாக இருப்பதால் இவ் ஆய்வில் இம் மாவட்டங்களின் பாதிப்பு வெளிப்படுத்தப்படவில்லை. இருந்தபோதிலும் இச் சமூகங்களில் ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் கல்விநிலை ஆகியவற்றின் மீதான தாக்கம் தேசிய சராசரிக்கு குறைவானதாகவே இருக்கின்றது என்பது கண்கூடான உதாரணமாகும்.



மெதுவாக ஆரம்பிக்கும் இப் பேரழிவை தடுத்து நிறுத்துவதற்கான தலையீடுகளில் கௌரவமான நிவாரணத்தை வழங்கும் செயற்திட்டங்களை இது அறிமுகப்படுத்துகின்றது. உணவு மற்றும் பண ஊதியத்துடனான வேலை உத்தரவாதத் திட்டம், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கூடாக மாணவர்களுக்கு நாளாந்தம் உணவு கிடைப்பதை உறுதிப்படுத்துதல், சிறு விவசாயிகளை ஊக்குவிப்பதற்கூடாக உள்ளூர் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவித்தல். உடனடி நிவாரண நடவடிக்கைகளுடன் ஆரம்பித்து மீண்டும் வாழ்வாதாரத்தினை கட்டியெழுப்பி நீண்ட காலத்தில் நிலையான வாழ்வாதாரத்திற்கு இட்டுச் செல்லல் வேண்டும்

தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்படும் சமூக பாதுகாப்பு (நலன்புரிகள்) போதுமானதாக இல்லாததுடன் பயனற்றதாகவும் உள்ளது. நாட்டில் பொது விநியோக முறைமை இல்லாதுள்ளது. அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு திட்டத்தில் மாதாந்தம் 11 டொலர் பணப்பரிமாற்றம் இலங்கை ரூபாவில் 4000.00 ரூபாவாக காணப் படுகின்றது. இந்த பணம் சமுர்த்தி நிவாரணம் பெறும் 4 அங்கத்தவருக்கு மேற்பட்ட குடும்பத்திற்கு போதுமானதாக இருக்குமா? எனவே உணவு மற்றும் பணத்திற்கான வேலை உத்தரவாதத் திட்டத்தினை உருவாக்குதல் வேண்டும்.இந்தியாவில் அமுலில் உள்ள மாகாத்மா காந்தி கிராமிய வேலை உத்தரவாதத் திட்டத்தினை போன்று வருடாந்தம் 100 - 120 வேலை நாட்கள் ஒரு குடும்ப உறுப்பினருக்கு வழங்குவது அவசியமானதும் கௌரவமான நிவாரணமாகும். “வேலையானது” விவசாய உள்கட்டமைப்புகளான கால்வாய்கள் மற்றும் வடிகால்களை வலுப்படுத்துவதாக உள்ளடக்கப்படுவதுடன் குழந்தைகள் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு மற்றும் நோயாளிகள் பராமரிப்பு ஆகியவற்றையும் குறிப்பாக வேலைக்கு செல்லும் பெண்களின் குடும்ப உறுப்பினர்களின் நோய் வாய்ப்பட்ட அங்கத்தவர்கள் மற்றும் மருத்துவமனை நோயாளர் பராமரிப்பு போன்ற வேலை களையும் உள்ளடக்கலாம்.

இதற்கு 70% கொடுப்பனவானது அரிசி, கோதுமை மா, பருப்பு, சீனி மற்றும் மண்ணெண்ணை போன்ற பொருட்களாக வழங்கப்படலாம். மிகுதி30% பணமாக வழங்கப்படலாம் உணவுப்பொருட்களுடன் இணைந்து வழங்கப்படும் பணமானது ஒரு குடும்பத்தை தற்போதைய சூழ்நிலையிலிருந்து பாதுகாக்கும். குறைந்தது 1மில்லியன் (இலங்கையின் ஏழ்மையான குடும்பங்கள் 15%) குடும்பங்களுக்கு தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு இவ் உதவியானது வழங்கப்படல் வேண்டும். இது அவர்களின் உடல், உள, நல்வாழ்விற்கு ஒரு கண்ணியமான வழியாகும். இச் செயற்பாட்டினால் நாட்டில் 15% ஆன குடும்பங்களுக்கு உணவு வழங்கப்படுவதனூடாக சந்தைக் கான கேள்வியை குறைப்பதுடன் உணவுப் பொருட்களின் விலைகள் நியாயமான வரம்புக்குள் தக்கவைக்கப்படும்.

பிராந்திய சமூகங்களின் உணவு உற்பத்தியினை அதிகரிப்பதற்கான உறுதிப்படுத்த இடைக்கால திட்டங்கள் தேவை. அந்நிய செலாவணி நெருக்கடியானது உணவுப்பொருட்களின் இறக்குமதியினை குறைக்கின்றது. நீண்ட காலத்திற்கு உணவு உதவியினை நம்பியிருக்க முடியாது. அதனால் உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு ஆதரவு வழங்குதல் வேண்டும். இவ்வாறான சூழ்நிலையில் விவசாயிகள் கூடுதலான உற்பத்தியை செய்வதற்கும் அவர்களுக்கு வரும் இடர்பாடுகள் மற்றும் அழிவுகளை எதிர்கொள்வதற்குமான ஊக்குவிப்புகளை வழங்க வேண்டும். உற்பத்தியில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது விலைகள் குறைவடைந்து பரந்த பொருளாதார சூழலை உறுதிப்படுத்தும். உற்பத்தியை அதிகரிப்பதற்கான இடைக்கால வேலைத் திட்டத்தினை மூன்று சாத்தியமான வழிகளில் மேற்கொள்ளலாம்.

அ.மிகவும் வறுமைக் குட்பட்ட குடும்பங்கள் அவர்களுடைய வீட்டுத் தேவைகளுக்கு பயிரிடுதல்.

ஆ.சிறு விவசாயிகளின் உற்பத்தியினை ஊக்குவித்தல் அல்லது இடர்கள் மற்றும் உற்பத்தி செலவினை குறைப்பதன் மூலம் உற்பத்தி யின் அளவினை தக்க வைத்தல்.

இ. சமூக நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு உதவி செய்வதுடன் நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்கள்.

வீட்டுப் பண்ணையானது உணவுப் பாதுகாப்பினை அதிகரிக்கும். வீட்டுத் தோட்டம் மற்றும் நாட்டுக் கோழி வளர்த் தலானது பணத்தில் தங்கியிருப்பதனை குறைக்கும். புரதத்தினை பெற்றுக்கொள்ளும் பயிர்கள் மற்றும் கால்நடைகளை (மரக்கறி, தானியங்கள், கோழி) வளர்ப்ப தன் மூலம் நிறைந்த உணவுச் சமநிலையை பேணுவதற்கு இது உதவி செய்யும். இது வருமானமீட்டும் செயற்திட்டமாக கரு தாமல் கிடைக்கக்கூடிய பல்வேறுபட்ட உணவுகளின் மூலம் வீடு மற்றும் சமூகத்தின் தேவைக்கு உதவியாக இருத்தல்.

வீட்டுத் தோட்டத்தினை சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கும் வளங்களை வினைத்திறனாக பயன்படுத் துவதற்கும் தொழில்நுட்ப பயிற்சிகள் மற்றும் நாற்றுக்கள் உள்ளூரில் கிடைக் கக்கூடியதாக மாதிரி நாற்று மேடைகளை உருவாக்குதல் வேண்டும். விதை களை மாத்திரம் வழங்குவது பொருத்த மானதல்ல.

வீட்டு உணவுப் பாதுகாப்பிற்காக உற்பத்தியினை அதிகரிப்பதற்கான நிதியுதவி அளித்தல் செயற்திட்டத்தில் வியாபார நோக்கம் அல்லாத மற்றும் காணி உள்ள விவசாயிகளுக்கு ½ -1 ஏக்கருக்கு நெல்,½ -1 ஏக்கருக்கு தானியம் மற்றும் மரக்கறி பயிரிடுவதற்கு நிதியுதவி அளித்தல். உழுதல், விதைநெல் மற்றும் உரத்திற்கான நிதியாக ரூ 30,000%- மானியமாக வழங்கள். (09 ஆம் பக்கம் பார்க்க...)

# உணவுப் பாதுகாப்பின்மையை...



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நடவடிக்கை உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் ஊட்டச்சத்தினையும் பெறக்கூடியதாக விருக்கும். உற்பத்தியாளர்களுக்கு பொதுவிலுள்ள உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் குறைந்த வாடகையில் கிடைப்பதனை உறுதிப்படுத்தல். மேலும் சிறு விவசாயிகள் கூட்டாக சேர்ந்து பயிரிடும் போது பாதுகாப்பிற்காக செலவிடும் நேரம், வன விலங்குகளால் குறிப்பாக யானைகளினால் ஏற்படுத்தப்படும் அழிவுகளைக் குறைக்கலாம்.

கிராமிய விவாசாய உற்பத்தியினை தக்கவைத்தலும் அதிகரித்தலுக்கூடாக சிறு வியாபார நோக்கத்தை கொண்ட விவசாயிகளை ஊக்குவித்தல் பொது வாக 5 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடும் விவசாயிகள் சிறு விவசாயிகளாக கருதப்படுவர். இவர்கள் தமது சொந்த காணியில் அல்லது நீண்ட கால குத்தகைக்கு காணிகளை பெற்று பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள் ஆனால் இவர்களிடம் சொந்தமாக இயந்திரங்கள் காணப்படாமையினால் வாடகைக்கு எடுக்க வேண்டியுள்ளது. இந்த விவசாயிகள் அதிகரித்த உற்பத்தி செலவுகள் மற்றும் உரத் தட்டுப்பாடு காரணமாக பயிர்செய்கையை கைவிடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. குறைந்த உற்பத்தி செலவில் பயிர்ச்செய்கை யினை மேற்கொள்வதற்கு பின்வரும் பரிந்துரை நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

a)விவசாயி தமது சொந்த உணவுத் தேவையை பெற்றுக்கொள்வதற்கு விதை நெல், உழுதல் மற்றும் - ஏக்க ருக்கான உரம் ஆகியவற்றிற்கு ரூ45,000/- ஐ மானியமாக வழங்கள்

b)வியாபார நோக்கத்திற்காக 4.5 ஏக்கருக்கு மேற்படி செலவுகளுக்கு ரூ135,000/- காப்புறுதியையும் உள்ள டக்கி வழங்குதல்.

இவ்வாறான செயற்திட்டத்தினை மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, தானியங் கள் மற்றும் மரக்கறிகளை பயிரிடுவ தற்கான உற்பத்தி செலவுகளுக்கும் மானியம் வழங்கள்.

அரசு மற்றும் அரசு சார்பாற்ற நிறு வனங்களிலுள்ள வளங்களை பயன்படுத் துவதற்கேதுவாக, குறைந்த நிதி வளத் துடன் அரசாங்கம் தமது ஊழியர்களை கமநல சேவைகள் திணைக்களத்திலுள்ள உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களை பெற்றுக்கொள்வதற் கான எளிதாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சிறந்த திட்டமிடல் மற்றும் வளங்களை விவசாயிகள் பொது வில் பயன்படுத்துதல் மற்றும் சமூகமட் டத்தில் நிர்வகித்தல் என்பது ஒரு நிலைத்திருக்கும் நடவடிக்கையாக இருப்பதுடன் உற்பத்தி செலவினையும் குறைக்கும்.

தொடர்ச்சியான பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்ட உள்நாட்டு விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த நடுத்தர கால விவசாய நடைமுறை தேவை யுள்ளது. இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய தொழில்நுட்பங்களின் மாதிரியினை இங்கு செயற்படுத்தலாம் அல்லது நிலைத்திருக்கும் விவசாய நடைமுறைகளை (GAP) செயற்படுத் தலாம். விவசாயிகள் கூடுதல் இரசாயன உரப்பாவனை, பூச்சிக்கொல்லிப் பாவனை மற்றும் மேலதிக நீர் பயன் பாடு போன்றவற்றை விடுத்து நிலைத் திருக்கும் மற்றும் வினைத்திறனான நடைமுறைகளை செயற்படுத்துவதன் மூலம் உரங்களில் தங்கியிருப்பதனை குறைத்தல்.

காணியில்லாத சிறு விவசாயிகளுக்கு வங்கிக் கடன்கள் கிடைப்பது குறைவு. அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் இயற்கை அழிவுகளின் நிவாரணம் தவிர்ந்த ஏனைய காப்பீடுகள் இல்லை. பல்வேறு காரணங்களினால் பாதிக் கப்படும் பயிர்களுக்கு எவ்வித இழப் பீடும் கிடைப்பதில்லை குறிப்பாக குத்தகை காணியில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இது பாதகமான தொன்றாகும். உற்பத்தி செலவில் ஒரு பகுதி செலவானது காப்புறுதி இழப்பீட் டிலிருந்து கிடைக்கப்பெறுமாயின் அது விவசாயிகளுக்கு இடர்களிலும் உற்பத்தி யினை மேற்கொள்வதற்கு ஊக்கமளிப் பதாக அமையும்.

இலங்கையானது ஏராளமான நீர் மூலங்களை கொண்டுள்ளமையினால் பலதரப்பட்ட நன்னீரில் கிடைக்கக் கூடிய உணவுப் பொருட்களைக் கொண்டு தலைமுறை தோறும் சமூகங் களை நிலைத்திருக்க வைத்திருக்கின்றது. இருந்தபோதிலும் அதிகரித்த பயன்பாடு மற்றும் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக இதன் உச்ச பயனை அடைய முடியவில்லை. இதன் பயன்பாடு தொடர்பான சிறந்த திட்ட மிடலினை மீன்பிடி சமூகங்களுடன் இணைந்து செயற்படுத்துவதன் மூலம் மீன் விருத்தி மற்றும் அறுவடையை பெருக்கி உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் சந்தை வழங்க ளையும் விலை நிர்ணயத்தினையும் ஏற்படுத்தலாம். உடனடி நடவடிக்கை யாக மீன்குஞ்சுகளின் உற்பத்தியினை பெருக்கி தேவையானளவு அதன் இருப்பினை உறுதிசெய்தல்.

கூட்டுறவு மற்றும் சமூகமட்ட அமைப்புகள் உற்பத்தியினை பெருக்குவதில் முக்கிய பங்கு வகிக்க முடியும். உள்ளூர் உற் பத்தியாளர்களின் வரு மானத்தை அதிகரிக்க இவ் அமைப்புகள் உற்பத்தியாளர்களிட மிருந்து மூலப்பொரு ளினை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்து அதன் அங்கத்த வர்களுக்கு உணவுப் பொருட்களாக நியாய மான விலைக்கு விற்பனை செய்யலாம்.



1.உற்பத்தி கூட் டுறவு சங்கங்கள் பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் நெல் மற்றும் தானிய வகை களை உற்பத்தியாளர்க ளிடமிருந்து கொள்வனவு செய்து அதன் உறுப்பினர்களுக்கு விநியோகித்தல். மூலதனம் அல்லது 3 - 4 மாதங்களில் மீளச் செலுத்தக்கூடிய கடன்களை வழங்குதல். குறுகிய காலத்தில் காலாவ தியாகும் பொருட்களை விநியோகிக்க கூடுதல் பகுப்பாய்வு தேவைப்படும்.

2.சமுர்த்தி மற்றும் ஏனைய நிறுவ னங்களினால் சமூக அமைப்புகளுக்கு கடன் வழங்குதல். நெல் மற்றும் தானிய வகைகளை உற்பத்தி இடங்களிலேயே கொள்வனவு செய்தல் மற்றும் சிறு உற்பத்தியாளர்களுக்கு மீண்டும் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு கடன் வசதிகளை ஏற்படுத்துதல். இச் செயற்பாடுகளில் சமூகங்கள் தமக்கு வரும் அழிவுகளை பாதுகாப்பதற்கு இணைந்து உற்பத்திகளில் ஈடுபடுவ தனை உறுதி செய்தல்.

கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களுக்கு இச் செயற்பாட்டிற்கான போக்குவரத்து, எடைகளில் ஏற்படும் குறைவுகள் மற்றும் பொருட்கள் பழுதடைதலினால் ஏற்ப டும் இழப்பினை ஈடுசெய்வதற்கு மானிய உதவி தேவைப்படும். வரலாற்று ரீதியாக அரசாங்கமானது உணவுப் பொருட் களை கொள்வனவு செய்து விநியோகிக்க நிதியினை மாவட்ட செயலகத்தினூடாக கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குகின்றது. சமீபத்தில் கோவிட் பெருந்தொற்றின் போதும் வழங்கப்பட்டது. இருந்த போதிலும் தற்போது அரசிடம் நிதியின் மையினால் இச் செயற்பாடு நிறுத்தப் பட்டுள்ளது.

தற்போதைய உணவு விநியோக வலையமைப்பானது போக்குவரத்து மற்றும் எரிபொருளின் இருப்பின் அடிப் டையில் செயற்படுகின்றது. இலங்கை யில் மிகக் கூடுதலான மரக்கறிகள் தம் புள்ளையூடாகவே பரிமாற்றம் செய்யப் படுகின்றது. இவ் நடைமுறையில் சில வேளைகளில் அதன் உற்பத்தி இடத் திற்கு மீண்டும் அப் பொருளினை கொண்டுவருதல் வீணான நடவடிக் கையாகும் மாவட்ட மட்டத்தில் பொருட் களை சேகரித்து விநியோகிக்கும் நடை முறையொன்று காணப்பட வேண்டும். மேலதிக பொருட்களை ஏனைய பிர தேசங்களுக்கு கொண்டு செல்வதற்காக குறிப்பாக நகர்ப்புறங்களுக்கு கொண்டு செல்வதற்குரிய நடைமுறைகளை உரு வாக்குவதன் மூலம் பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவினை மிச்சப்படுத் தலாம். விரைவில் பழுதடையக்கூடிய பொருட்களை குளிர்சாதன வசதிகளு டான களஞ்சியப்படுத்தல் முறைகளை அறிமுகப்படுத்தி இது போன்ற களஞ் சியப்படுத்தல் நடவடிக்கைகளில் தனி யார்துறையையும் ஈடுபடுத்தலாம். உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை நேரடியாக சந்தைப்படுத்துவதற்கு ஏதுவாக தமிழ் நாட்டில் நடைமுறை யிலுள்ள உழவர் சந்தை முறைமையை பயன்படுத்தி உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை பெறுவதற்கு வழிவகுத்தல். இதனூடாக உணவு விநியோக வலையமைப்பினை மறு பரிசீலனை செய்தல்.

விநியோகத்தலில் அரசியல் தலையீடு மற்றும் தீங்கு செய்யாமை கடைப் பிடிக்கப்படல் வேண்டும். திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் விநியோகித்தலின் போது அரசியல் தலையீடு இல்லாதிருத்தல் மிக முக்கியமானதாகும். அரசியல் குழுக்கள் தமது அதிகாரங்களை பயன்படுத்தி தமது ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்களை மேம்படுத்துவதற்கு இவ் உதவிகளை பயன்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும். ஆனால் இது போன்ற செயற்பாடுகளை பல இடங் களில் காணக்கூடியதாகவிருக்கின்றது.

உள்ளூர் மற்றும் பிரதேச செயற்பாட் டாளர்களின் ஈடுபாடு உறுதிசெய்யப் படல் வேண்டும். உதவிகளானது நாடு முழுவதும் விநியோகிக்கப்பட வேண் டும். முக்கியமாக வரலாற்று ரீதியாக, போரினால் ஏற்பட்ட அழிவு மற்றும் பல்வேறு பாதிப்புக்களை கொண்ட குழுக்களை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். கடுமையான நெருக்கடியின் காரணமாக பொதுவாக நிவாரண செயற் பாடுகளில் ஈடுபடும் அரசாங்க ஊழி யர்கள் மற்றும் அதன் முகவர்கள் பாதிப் புக்குள்ளாகியிருப்பதனால் நிவாரணங் களை பகிர்ந்தளிப்பதில் கூடுதல் கண்காணிப்பு அவசியமானதாகும்.

முடிவுரை

சிலர் ஏன் அதிகம் நலிவடைந் துள்ளார்கள் மற்றும் எந்தவொரு செயற் பாட்டிலும் சமபங்கு மற்றும் கண்ணி யத்தை வலியுறுத்த மீரா சீனிவாசன் அவர்களின் வடக்கு விஜயத்தின் சமீபத் திய கட்டுரையின் மேற்கோள் "தேசிய பொருளாதார நெருக்கடியானது உலக ளாவிய ரீதியில் மக்களின் துயரத்தையும் சீற்றத்தையும் கவனத்தில் கொண்டுவந் திருக்கலாம். ஆனால் பொருளாதார முன்னேற்றமானது வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் நிறைவேற்றப் படாத கோரிக்கைகளில் ஒன்றாகும். பல வருடங்களாக அவர்கள் வன்முறை மற்றும் நிதி சவால்களை எதிர்கொண் டாலும் குறிப்பாக பெண்கள், காணாமல் போன இளைஞர்களின் தாய்மார்கள் உண்மை மற்றும் நீதிக் கான கோரிக்கை களில் உறுதியாக உள்ளார்கள்.

இவை ஒன்றுக் கொன்று தொடர்பில் லாதவை அல்ல. மகன்கள் மற்றும் மகள்கள் இல்லாமல் வாழும் வேதனை, அவர்களில் பலர் இளமைப் பருவத்தின் பிற்பகுதியில் காணாமல் போனவர்கள். இது வருமானமீட்டும் குடும்ப உறுப்பினர்கள் குறைவாக உள்ளார்கள் என்று அர்த்தம்."

பொருளாதார நெருக்கடிக்குள்ளாக்கப் பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்கான வழிமுறை கள் தொடர்பான கலந்துரையாடல் களை மேற் கொள்வதற்காக எழுதப் பட்டுள்ளது. இதில் வழங்கப்பட்ட யோசனைகள் இலங்கை யிலுள்ள தனிநபர்கள், குழுக்கள் அல்லது அரசு மக்களுக்கு உதவிகளை வழங்குவதை எளிதாக்குவதாகவும் நிவாரணங்களுக்கு அப்பால் கண்ணியம் நிலைத்திருக்கும் தன்மை மக்களின் மீட்சிக்கும் பங்களிக்கின்றது.

(கட்டுரையாளர் சமூக சேவகர், அரசியல் செயற்பாட்டாளர், தந்தை செல்வாவின் குடும்பத்தவர்)

21.06.2022

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


- 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

**01.** வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.




(1) (2) (3)

**02.**



(1) (2) (3)

**03.** இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

**04.** **"பல்கலைக்கழகம்"** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


**05.** சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

**06.** உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

**07.** உலக மரபுரிமை மையங்களாக ........................ நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

**கல்வி tv CHANNEL-1**

**09.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**09.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஐந்நூறு மரக் கன்றுகள் நடும் வேலைத்திட்டம் ஆரம்பம்



அம்பாறை, ஜூலை. 09

சமூகங்களுக்கு மத்தியில் இன நல்லுறவை மேம்படுத்தும் விதத்தில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் அனுசரணையுடன் நேற்று முன் தினம் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன் போது பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட பயனாளிகள் நன்மை அடையும் விதத்தில் ஐந்நூறு மரக் கன்றுகளை நடும் வேலைத் திட்டம் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபரும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளருமான இணைப்பாளருமான ஏ.ஜி.எம் றிஷாதின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட விவசாய பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.எச்.நிஹார், மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் விரிவுரையாளர் அன்ஸார் மௌலானா, கல்முனை சமுர்த்தி மகாசங்க முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.பரீரா, கல்முனைக்குடி சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம். புவிராஜ், விவசாயப் போதனாசிரியர் பி. திருத் திக்கா, ஆசிரியர் டி.கே.எம். மௌசீன் ,சமுர்த்தி அபிவி ருத்தி உத்தியோகத்தர் ஐ.எல். அர்சுதீன் , சமுர்த்தி சமுதாய அடிப்படை சங்கத் தலைவர் எஸ்.காலித், என பலரும் கலந்து சிறப்பித்தனர். (அ)

# இலங்கை அரசின் மீது இந்தியா அழுத்தங்கள் வழங்காதது ஏன்?

## இரா.துரைரெட்ணம் கேள்வி

**மட்டக்களப்பு, ஜூலை. 09**

**இந்திய அரசாங்கம் இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்திலும் அதிகாரப்பரவலாக்கல் விடயத்திலும் எந்தவித அழுத்ததினையும் முன்வைக்காதது வேதனையான விடயம் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் தலைவருமான இரா.துரைரெட்னம் தெரிவித்துள்ளார்.**



மட்டு.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல உதவிகளை இலங்கை மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இனமதபேதம் பாராமல் இந்திய அரசாங்கம் வழங்கிவருவது பாராட்டுக்குரியதென்றாலும் வடக்கினைப்பொறுத்தவரையில் இந்திய அரசாங்கம் கூடுதலான உதவிகளையும் கிழக்கில் என்ன உதவி செய்துள்ளார்கள் என்று கேள்வி கேட்ககூடிய சூழ்நிலையுமே காணப்படுகின்றது.

இனப்பிரச்னை தொடர்பாக ஒரு அழுத்தத்தினை இலங்கை அரசாங்கத்திற்கு ஏன் இந்திய அரசாங்கம் வழங்கவில்லையென்ற கேள்வி மக்களிடம் எழுத்துள்ளது.

தமது ஆட்சியில் மக்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொண்டு இந்த ஆட்சியில் உள்ளவர்கள் பதவி விலகுவேதே இன்றைய சூழலுக்கு ஏற்ற விடயமாகும்-என்றார். (அ)

# பெண் பொலிஸ் அலுவலருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த பொலிஸ் சாரதி கைது!

மட்டக்களப்பு, ஜூலை. 09

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மீது பாலியல் தொல்லை கொடுத்த பொலிஸ் சாரதியை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் பெண்கள் பிரிவில் கடமைற்றிவரும் குறித்த பெண் உத்தியோகத்தர் மீது சம்பவதினமான நேற்று முன் தினம் பிற்பகல் சாரதியாக கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் பொலிஸ் நிலையத்தில் வைத்து கையைப்பிடித்து பாலியல் தொல்லை கொடுத்ததாக குற்றஞ்சாட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொண்டு வந்ததையடுத்து உடனடியாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தரைப் பணியில் இருந்து இடைநிறுத்தியதுடன் அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனை வழங்கியதையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் அம்பாறையைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் பொலிஸ் சாரதியாக கடமையாற்றி வருகின்றார் எனவும் அவர் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# மட்டக்களப்பு நகரில் திருடப்பட்ட 12 சைக்கிள்களுடன் ஒருவர் கைது!



மட்டக்களப்பு, ஜூலை. 09

மட்டக்களப்பு நகரில் சைக்கிள்களை திருடிவந்த காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்ததுடன் திருடப்பட்ட 12 சைக்கிள்களை மீட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு அரசடிபகுதியில் உள்ள தனியார் கம்பனி ஒன்றிற்கு முன்னால் சம்பவதினமான நேற்று முன் தினம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளை ஒருவர் திருடும் போது அந்த தனியார் கம்பனி பணியாட்கள் குறித்த திருடனை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்து குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன் பெக்கடர் எம்.ஜீ.பி.எம்.எம். யேசூலி தலைமையிலான பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தினமும் காத்தான்குடியில் இருந்து பஸ்ஸில் பிரயாணித்து மட்டு. நகருக்கு வந்து அங்கு வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் சைக்கிள்களை திருடிக் கொண்டு சென்று அதனை காத்தான்குடிப் பிரதேசத்தில் 17 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் வரைவில் விற்பனை செய்துள்ளதாகவும் சில சைக்கிள்களை கழற்றி பாகங்களாக விற்பனை செய்துள்ளதாகவும் போதைவஸ்துக்கு அடிமையான நிலையில் அதற்கு பணத் தேவைக்காக சைக்கிள்களை திருடி விற்பனை செய் துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 12 சைக்கிள்களை மீட்டுள்ளதுடன் குறித்த நபரை நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் பொலிஸார் கூறினர். (அ)




# கோட்டாவை வெளியேற்ற ஆதரவளித்து எமது கல்வியைப் பாதுகாப்போம்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

அம்பாறை, ஜூலை. 09

ஜனாதிபதியை வெளியேற்றும் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதன் ஊடாக எமது கல்வியை பாதுகாக்கும் உரிமைக்கான போராட்டத்தில் அனைவரையும் கைகோர்க்குமாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸா கேட்டுள்ளார்.

கல்முனையில் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாளை (இன்று) சகல அமைப்புகளினால் ஜனாதிபதியை வெளியேற்றும் போராட்டம் இடம்பெற தயார்படுத்தல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கல்வி உரிமை எதிர்கால மாணவர் தலைவர்களை பாதுகாப்பதற்கு சகல தரப்பும் முன்வர வேண்டும்.

கடந்த 4 வருடங்கள் தற்போதைய ஜனாதிபதி கல்வி சமூகத்தை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டுள்ளதுடன் எஞ்சிய 2 வருடங்கள் அவர் ஆட்சியில் இருப்பதை விட நாம் அனைவரும் இணைந்து அவரை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்ற வேண்டும்-என்றார். (அ)

# ஜப்பானில் முன்னாள் பிரதமர் சுடப்பட்டார்!

## தேர்தல் கூட்டத்தில் சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பு

ரோக்கியோ, ஜுலை. 09

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுடப்பட்டு மிக ஆபத்தான நிலையில் உள்ளார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாட்டில் நடந்திருக்கின்ற மிக அரிதான இந்த சூட்டுச் சம்பவம் அங்கு பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது. முன்னாள் பிரதமர் சுடப்பட்டதை அரசு உறுதி செய்துள்ளது. ஆனால் அவரது நிலை என்ன என்பது குழப்பமாக உள்ளது . அவரது இதயம் - நுரையீரல் செயலிழந்துவிட்டது என்று மட்டுமே அறிவிக்கப்பட்டிருக்கிறது.



மேற்கு நகரமான நராவில் நேற்று தேர்தல் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டிருந்த சமயத்தில் நபர் ஒருவர் அபேயை நெஞ்சில் சுட்டார் என்று கூறப்படுகிறது.

தாக்குதலாளி எனச் சந்தேகிக்கப்படும் நாற்பது வயதுடைய நபர் ஒருவரைப் பொலீஸார் கைதுசெய்திருக்கின்றனர். வீதியோரம் கூட்டம் ஒன்றில் அபே உரையாற்றிக் கொண்டிருந்த வேளை ஸ்கூட்டர் ஒன்றில் அந்த இடத்துக்கு வந்த தாக்குதலாளி அவரை நோக்கி இரண்டு தடவை சுட்டுள்ளார். ஒரு சூடு தவறியது. இரண்டாவது சூடு அவரது நெஞ்சில் பாய்ந்துள்ளது. அவசரமாக அவர் மருத்துவமனைக்கு கொண்டு விரையப்பட்டார்.

ஜப்பானிய நாடாளுமன்றத்தின் மேற்சபைக்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தேர்தலுக்கான பிரசாரப்பணியில் ஈடுபட்டிருந்த சமயத்திலேயே ஷின்சோ அபே சுடப்பட்டிருக்கிறார். ஜப்பான் மிக கடுமையான துப்பாக்கி கட்டுப்பாடு சட்டங்கள் உள்ள நாடு. அங்கு சூட்டுச் சம்பவங்கள் நடப்பது மிக அரிது. அதனால் நேற்றைய சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

67 வயதான ஷின்சோ அபே ஜப்பானில் மிக நீண்ட காலம் பதவியில் இருந்த பிரதமர் ஆவார்.

நாட்டின் பிரதமராகவும் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவராகவும் 2006-2007 பின்னர் 2012-2020 ஆண்டுகளில் பணியாற்றி இருந்தார்.

முன்னாள் பிரதமர் சுடப்பட்ட சம்பவத்துக்கு உலகெங்கும் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து செய்திகளை வெளியிட்டு வருகின்றனர். (அ)

# 3 ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்பெயினில் காளை விரட்டு!



மட்ரிட், ஜுலை. 09

ஸ்பெயினில் கொரோனா நெருக்கடி காரணமாக கடந்த 3 ஆண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த அந்த நாட்டின் பாரம்பரிய நிகழ்ச்சியான காளை விரட்டு நேற்று முன் தினம் மீண்டும் நடைபெற்றது.

ஸ்பெயினின் பாம்ப்லோனா நகரில் ஒரு வார கால சான் பொர்மின் திருவிழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. இந்தப் பாரம்பரியத் திருவிழாவில் நடைபெறும் காளை விரட்டு நிகழ்ச்சி மிகவும் புகழ்பெற்றதாகும்.

குறுகிய சாலையில் சுமார் 6 காளைகளை பெரும் கூட்டம் விரட்டிச் செல்லும் நிகழ்ச்சியின்போது, காளைகளால் முட்டப்பட்ட பலர் காயமடைவதுண்டு. கடந்த 1910 ஆம் ஆண்டு முதல் இதுவரை 15 பேர் இந்த நிகழ்ச்சியின்போது காளைகள் முட்டி உயிரிழந்துள்ளனர்.

3 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு நேற்று முன் தினம் நடைபெற்ற காளை விரட்டு நிகழ்ச்சியில் ஏராளமானோர் கூடுதல் உற்சாகத்துடன் பங்கேற்றனர். எனினும், இந்த நிகழ்ச்சியில் யாரும் காயமடையவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# உக்ரைன் போரில் இதுவரை 346 குழந்தைகள் உயிரிழப்பு!

கீவ், ஜுலை. 09

உக்ரைனில் போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 346 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த பெப்ரவரி 24 அன்று கியேவ் மீது ரஷ்ய படைகள் தனது ஆக்கிரமிப்பைத் தொடங்கியது. அதுமுதல் நேற்று வரை மொத்தம் 346 குழந்தைகள் பலியாகியுள்ளனர். மேலும் 645 குழந்தைகள் காயமடைந்துள்ளதாக உக்ரைனிய தகவல்கள் தெரிவிக்கின்றது.



மேலும், இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள உயிரிழப்புகளின் எண்ணிக்கை இறுதியானது கிடையாது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் தரவுகளைத் திரட்டும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

ரஷ்ய படைகள் நடத்திய தொடர் தாக்குதல்களால் உக்ரைனில் 2,108 கல்வி நிறுவனங்கள் சேதடைந்துள்ளன. அவற்றில் 215 முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி போரிலிருந்து தப்பிச் செல்லும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பல குழந்தைகள் குடும்பப் பிரிவினை, வன்முறை, துஷ்பிரயோகம், பாலியல், கடத்தல் போன்ற ஆபத்துக்களில் சிக்கியுள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது. (அ)

# பேச்சுக்கு ரஷ்யா தயாராக உள்ளது

## காலம் கடந்தால் கடினமாகிவிடும் என்கிறார் புடின்

மொஸ்கோ, ஜுலை. 09

உக்ரைனுடன் அமைதிப் பேச்சுவார்த் தைக்கு ரஷ்யா இன்னமும் தயாராக உள்ளது. எனினும் காலம் கடந்தால் பேச்சுவார்த்தைகள் காலப்போக்கில் கடினமாகிவிடும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.



“நாங்கள் சமாதான பேச்சுவார்த்தைகளை மறுக்கவில்லை. ஆனால் பேச்சுக்கு வர மறுப்பவர்கள் எவ்வளவு நேரத்தை வீணடிக்கிறார் களோ, அவ்வளவுக்கு பின்னர் எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது கடினமாக இருக் கும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்” என ரஷ்ய சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய புடின் கூறினார்.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் பல தசாப்தங்களாக ரஷ்யாவுக்கு எதிராக மிகவும் ஆக்ரோஷமாக செயற்பட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

“ஐரோப்பாவில் சம பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதற்கான எங்கள் முன்மொழிவுகள் நிராகரிக்கப்பட் டன. ஏவுகணை பாதுகாப்பு பிரச்சனையில் கூட்டு வேலைக்கான முயற்சிகள் நிராகரிக்கப்பட்டன. நேட்டோ விரிவாக்கம் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்படுகின்றன,” என்று புடின் கூறினார்.

உலகில் புதிய ஒழுங்கை திணிக்கும் மேற்கத்திய நாடுகளின் முயற்சிகள் தோல்வியில் முடியும் எனவும் ரஷ்ய ஜனாதிபதி புடின் தெரிவித்தார். இதேவேளை, உக்ரைனில் நாங்கள் இன்னும் தீவிரமான போரை தொடங்கவில்லை என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் எச்சரித்தார். (அ)

# யேமன் கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் அரசு இரகசியமாக அனுப்பிய ஏவுகணை பறிமுதல்

லண்டன், ஜுலை. 09

யேமன் கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ரகசியமாக அனுப்பிய ஏவுகணைகளை தங்கள் நாட்டு கடற்படை இடைமறித்து பறிமுதல் செய்துள்ளதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது.

ஓமன் வளைகுடா பகுதியில் ஈரானிலிருந்து அனுப்பட்ட தரையிலிருந்து வான் இலக்குகளைத் தாக்கும் ஏவுகணைகள் மற்றும் என்ஜின்கள், தரை இலக்குகளைத் தாக்கும் ‘க்ரூஸ்’ வகை ஏவுகணைகள் ஆகியவற்றை பிரித்தானிய கடற்படை பறிமுதல் செய்துள்ளதாக ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள பிரிட்டன் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், யேமனின் ஹூதி கிளரடச்சியாளர்களுக்காக அந்த ஏவுகணைகள் அனுப்பப்பட்டிப்பதாகவும், கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் அதிநவீனமான ஆயுதங்கள் அனுப்பி, அவை பறிமுதல் செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு ஈரான் ஆயுத உதவி அளிப்பதற்கான வலுவான ஆதாரம் தங்களுக்குக் கிடைத்துள்ளதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது. (அ)





## விம்பிள்டன் ரென்னிஸ் விலகினார் ரபேல் நடால்!

லண்டன், ஜூலை 09

லண்டனில் நடக்கும் விம்பிள்டன் தொடரிலிருந்து நட்சத்திர வீரரான ரபேல் நடால் விலகியுள்ளார்.

இந்தத் தொடரில் அரையிறுதிக்கு முன்னேறிய நடால் காயத்தால் அவதிப்பட்டு வந்த நிலையில் தொடரிலிருந்து விலகுகிறார் என்று அறிவித்துள்ளார்.

நடால் முன்னதாக, காலிறுதியில் அமெரிக்க வீரர் ரெய்லர் பிரிட்ஸூக்கு எதிராக விளையாடி வென்றிருந்தார். இந்தப் போட்டி சுமார் 4 மணி நேரம் 20 நிமிடங்கள் நீடித்திருந்தது.

இதில், உடல் உபாதையால் அவதிப்பட்டு வந்தார். இதனால் ஆட்டத்தில் இருந்து விலகும்படி அவரின் அணியினர் வற்புறுத்தியதை போட்டி முடிந்ததும் வெளிப்படுத்தி இருந்தார் நடால். அதேபோல், ”நான் அரையிறுதியில் விளையாடுவேனா என தெரியவில்லை” என்றும் பேசியிருந்தார்.

இந்நிலையில், நேற்றைய தினம் அவுஸ்திரேலிய வீரர் நிக் கிர்கியோஸ் எதிர்த்து அரையிறுதியில் மோத சில மணி நேரங்கள் முன்னதாக போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இதையடுத்து கிர்கியோஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

36 வயதான நடால், ஸ்பெயின் நாட்டை சேர்ந்தவர். கிராண்ட்ஸ்லம் தொடர்களில் மொத்தம் 22 முறை பட்டம் வென்று சாதனை படைத்துள்ளார். ரென்னிஸ் உலகில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார் நடால் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# லபுசாக்னே, ஸ்மித் சதம் ஆஸி. வலுவான ஆரம்பம்!





காலி, ஜூலை 09

லபுசாக்னே, ஸ்ரீவன் ஸ்மித் ஆகியோரின் அபார சதங்களால் இலங்கைக்கு எதிரான டெஸ்டில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணி வலுவான ஆரம்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று காலி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய அந்த அணிக்கு உஸ்மான் கவஜா, டேவிட் வோர்ணர் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். வோர்ணர் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த லபுசாக்னே கவாஜாவுடன் இணைந்து நிதானம் காட்டினார். எனினும், இந்த இணையை அதிக நேரம் மெண்டிஸ் நீடிக்கவிடவில்லை. 37 ஓட்டங்களுடன் கவாஜா ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஸ்ரீவன் ஸ்மித் அபாரமாக ஆடினார். இருவரும் இலங்கையின் பந்துவீச்சாளர்களுக்கு சவால் விடுக்கும் விதமாக ஆடினர். பந்துவீச்சாளர்களின் கடின முயற்சிகள் இந்த இணையிடம் எடுபடவில்லை. லபுசாக்னே சதம் அடித்தார். 134 ஓட்டங்களை இந்த இணை பெற்ற பின்னரே விக்கெட் வீழ்த்தப்பட்டது.

லபுசாக்னே 12 பௌண்ட்ரிகளுடன் 104 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார். ஆனால், ஸ்மித் களத்தில் நின்றார். அடுத்து வந்த, ட்ராவிஸ் ஹெட் 12 ஓட்டங்கள், கமரூன் கிறீன் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும், ஸ்மித்துடன் இணைந்த அலெக்ஸ் காரி சற்றுப் பொறுமை காத்தார். இதனிடையே ஸ்மித் தனது 28ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார் நேற்றைய தினம் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது அவுஸ்திரேலிய அணி, 5 விக்கெட்கள் இழப் புக்கு 298 ஓட்டங்களைக் குவித்திருந்தது. ஸ்மித் 109 ஓட்டங்களுடனும், காரி 16 ஓட்டங் களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் அறிமுக வீரரான பிரபாத் ஜெயசூரியா 3 விக்கெட்களையும் கசூன் ராஜித, ரமேஷ் மெண்டிஸ் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டமாகும். (ஐ)

# இங்கிலாந்துடனான ரி-20; இந்தியா அபார வெற்றி!

சௌதாம்ப்டன், ஜூலை 09

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் இருபது - 20 போட்டியில் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது இந்திய அணி.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரின் முதல் போட்டி சௌதாம்டனில் நேற்று முன்தினம் தொடங்கியது.

கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்த இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா தனது பொறுப்பை ஏற்றார்.

விராட் கோலி, ஜஸ்பிரீத் பும்ரா, ரவீந்திர ஜடேஜா, ஸ்ரேயாஸ் ஐயர், ரிஷப் பந்த் ஆகியோர் 2ஆவது போட்டியை ஒட்டியே அணியுடன் இணையவுள்ள நிலையில் அயர்லாந்து தொடரில் விளையாடிய வீரர்களுடன் களமிறங்கினார் ரோஹித்.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடியது.

இஷான் கிஷனுடன் இணைந்து ரோஹித் சர்மா தொடக்க வீரராகக் களமிறங்கினார். ஆரம்பமே அதிரடியாக இருந்தது.

அடுத்தடுத்து ஐந்து பௌண்ட்ரிகளை விளாசிய ரோஹித் சர்மா வந்த வேகத்தில் நடையைக் கட்டினார். அவர் 24 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். இஷான் கிஷன் சோபிக்க தவறினாலும், அயர்லாந்துக்கு எதிரான தொடரில் சதம் அடித்த தீபக் ஹூடா, இந்தப் போட்டியிலும் அதே போர்மைத் தொடர்ந்தார்.



அவருடன், சூர்யகுமார் யாதவ் இணைந்துகொள்ள இந்திய அணியின் ஓட்ட சராசரி 10இற்குக் குறையவில்லை. இருவரின் அதிரடியையும் கிறிஸ் ஜோர்தான் வந்து தடுத்தார். ஹூடா 33 ஓட்டங்களுக்கும், சூர்யகுமார் 39 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர்.

இதன்பின் வந்தவர்கள் வருவதும் போவதுமாக இருந்தாலும், ஹார்திக் பாண்ட்யா அணியை மீட்டெடுத்தார். முதல் அரைச்சதத்தை அவர் பெற்றார். இந்த அரைச்சதத்தின் உதவியுடன் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் எட்டு விக்கெட்களை இழந்து 198 ஓட்டங்களை எடுத்தது.

பெரிய இலக்கைத் துரத்திய இங்கிலாந்து அணிக்கு முதல் ஓவரிலேயே அதிர்ச்சி கொடுத்தார் இந்திய பந்துவீச்சாளர் புவனேஷ்வர் குமார்.

அந்த ஓவரில் ஓர் ஓட்டத்தைக்கூட விட்டுக்கொடுக்காத புவனேஷ்வர் குமார் ஐந்தாவது பந்தில் இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லரை “கிளீன் போல்ட்“ செய்தார்.

அடுத்து வந்த பந்துவீச்சாளர்களும் மிரட்டவே ஓட்டங்களை எடுக்க முடியாமல் திணறியது இங்கிலாந்து அணி. குறிப்பாக ஹர்திக் பாண்ட்யா பந்துவீச்சிலும் மிரளவைத்தார்.

பாண்ட்யா வீசிய முதல் ஓவரிலேயே இரண்டு விக்கெட்களை வீழ்த்தியவர், மொத்தமாக நான்கு விக்கெட்களை வீழ்த்தினார். ஹர்ஷல் பட்டேல் உள்ளிட்டோரும் சீரான இடைவெளியில் இங்கிலாந்து வீரர்களை ஒவ்வொருவராக வெளியேற்றினர்.

இதனால் 19.3 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்களையும் இழந்து 148 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது இங்கிலாந்து. இதனால், இந்திய அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அந்த அணிக்காக மொயின் அலி 36, ஹாரி புரூக் 28, டேவிட் மலான் 21 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். கிறிஸ் ஜோர்தான் 26 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்திருந்தார்.

இந்திய அணியின் தரப்பில் ஹர்திக் பாண்ட்யா 4 விக்கெட்களையும், அர்ஷ தீப் சிங் மற்றும் சஹால் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் நாயகனாக ஹார்திக் பாண்ட்யா தெரிவானார். (ஐ)



## விம்பிள்டன் அரையிறுதியில் சிமோனா அதிர்ச்சி தோல்வி!

லண்டன், ஜூலை 09

ரென்னிஸ் உலகின் முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலேப் இளம் வீராங்கனையான எலெனா றிபாகினாவிடம் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

கிராண்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது. இதன் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று நடந்தன.

இதில், ஒன்றில் ருமேனியாவின் சிமோனா ஹாலேப் கஜகஸ்தானின் றிபாகினாவை எதிர்கொண்டார். இதில், றிபாகினா 6-3, 6 - 3 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறினார்.

இதேபோன்று, மற்றோர் அரையிறுதிப் போட்டியில் துனீசியாவின் ஒன்ஸ் ஜபிர், ஜேர்மனியின் மரினாவை 6-2, 3-6, 6-1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு நுழைந்தார். (ஐ)

# சிறுபோக அறுவடை முன்னெடுக்க 10 பவுசர் எரிபொருள் கிடைக்கும்!

*கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தகவல்*



**கிளிநொச்சி, ஜூலை. 09**

**சிறுபோக அறுவடை பாதிப்பின்றி முன்னெடுக்க 10 தொகுதி (பவுசர்) எரிபொருள் கிடைக்கும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

**கிளிநொச்சி மாவட்டத்தில் தற்பொழுது உள்ள நிலை தொடர்பில் ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்திலும் ஏனைய மாவட்டங்கள் போன்று எரிபொருள் பிரச்னை காரணமாக குறைந்த அளவிலான பணியாளர்களுடன் திணைக்களங்களில் பணியாற்றி வருகின்றனர்.

எமது மாவட்டம் விவசாய மாவட்டமாக இருக்கின்றமையால் சிறுபோக அறுவடையை எதிர்நோக்கியுள்ளது. சிறுபோக அறுவடைக்கான எரிபொருளை வழங்கும் நடவடிக்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எமது மாவட்டத்துக்கு 10 தொகுதி அளவிலான எரிபொருள் கிடைக்கும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. சிறுபோக அறுவடை பிரச்னையின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் பெற்றோல் மிகவும் தட்டுப்பாடான நிலை காணப்படுகின்றது. வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் உள்ளிட்டோர் பெற்றோலை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

சிறுபோகம் முடிவடைந்த பிற்பாடு இரணைமடுவின் கீழ் ஒரு சில இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அடுத்த காலபோகத்துக்கு முன்னர் மேற்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளோம்-என்றார். (அ)

## ஓமந்தை எரிபொருள் நிலையமருகே வாள்களுடன் மூன்று பேர் சிக்கினர்!

வவுனியா, ஜூலை. 09

வவுனியா ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகில் வாள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் வீதியிலே பல நாட்களாக காத்திருக்கின்றனர்.

நேற்று எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டபோது தங்களது வரிசைக்கே எரிபொருளை வழங்கவேண்டும் என தெரிவித்து சண்டையில் ஈடுபட்ட இடத்திற்கு சென்ற பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்திருந்ததுடன், சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்துள்ளதுடன், காரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் பொல்லுகளை மீட்டனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## எரிபொருள் நெருக்கடியை தீர்க்கக் கோரி புதுக்குடியிருப்பில் கவனயீர்ப்புப் பேரணி!

முல்லைத்தீவு, ஜூலை. 09

எரிபொருள் நெருக்கடியை தீர்க்கக்கோரி புதுக்குடியிருப்பில் கவனயீர்ப்புப் பேரணி ஒன்று நேற்று இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் உள்ள முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து மாட்டு வண்டியில் நோயாளர் ஒருவரை ஏற்றியவாறு அவருக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி. சிவமோகன் சிகிச்சை அளித்தவாறும், நோயாள் காவு வண்டி ஒன்றைக் கயிற்றில் கட்டி கட்சி ஆதரவாளர்கள் அதனை இழுத்தவாறும் சைக்கிள்களுடனும் ஆரம்பித்த கவனயீர்ப்பு பேரணி புதுக்குடியிருப்பு நகர்பகுதி ஊடாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் வரை சென்றது.

தற்போது நாடாளவிய ரீதியில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக நோயாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு ஓட்டோக்களுக்கோ, அல்லது மோட்டார் சைக்கிள்களுக்கோ எரிபொருள் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், உடனடியாக எரிபொருள் பிரச்னைக்கு தீர்வு பெற்றுத்தருமாறு கோரியும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## இலங்கை விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள்!

கொழும்பு, ஜூலை. 09

இலங்கையில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில், இலங்கையின் விமானங்களுக்கு இந்தியாவில் எரிபொருள் நிரப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசுக்கு சொந்தமான, பாரத் பெற்றோலியம், இலங்கையின் விமானங்களுக்கு எரிபொருட்களை நிரப்பி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாரத் பெற்றோலியமும் தமது ருவிட்டரில் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. இதன்படி இலங்கையின் சுமார் 100 விமானங்களுக்கு இதுவரை, திருவனந்தபுரம், சென்னை மற்றும் கொச்சி விமான நிலையங்களில் எரிபொருள் நிரப்பப்பட்டுள்ளது. (அ)

## விசேட சிகிச்சைக்காக பிற மாவட்டங்களுக்கு செல்லும் கர்ப்பிணிகளுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்க முயற்சி

கிளிநொச்சி, ஜூலை. 09

விசேட சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு செல்லும் கர்ப்பிணித் தாய்மாருக்காக எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சித்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உணவு பாதுகாப்பு என்ற விடயத்தில் போசாக்கான உணவை பயிரிடல் மற்றும் போசாக்கான உணவை பிள்ளைகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட விடயங்களும் அடங்குகின்றன.

அதற்கமைவாகவே வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்ளுமாறு மக்களிடம் நாங்கள் கோரிக்கை விடுத்திருந்தோம். இந்த வேலைத்திட்டத்திற்காக மருத்துவ மாதுக்களையும் உள்வாங்கியுள்ளோம். அவர்கள் ஊடாக கர்ப்பிணித் தாய்மார் மற்றும் போசாக்கு குறைந்த பிள்ளைகளை கொண்ட குடும்பங்களில் வீட்ட தோட்டம் உள்ளிட்ட விடயங்கள் ஊடாக போசாக்கை மேம்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

இதேவேளை, கைவிடப்பட்ட நிலங்களில் விவசாயம் மேற்கொள்ளும் திட்டத்தினையும் நாங்கள் முன்னெடுத்திருக்கின்றோம். அதன் ஊடாக போசாக்கான உணவுகளான தானிய வகைகளையும் மேற்கொள்வதற்கு அது வழிவகுக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறிய அளவிலான திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். அதேவேளை மக்களுக்கான போசாக்கு எனும் திட்டம் அரசாங்கத்தினால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதேவேளை கர்ப்பிணி தாய்மாருக்கு மாதாந்தம் 2000 ருபா வழங்கும் செயற்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கஷ்டமான நிலை மற்றும் விசேட சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்கு செல்லும் கர்ப்பிணி தாய்மாருக்காக எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

ஏனையவர்கள் தமது பிரதேசத்தில் உள்ள மருத்துவ மாதுக்களின் உதவியுடன் அருகில் உள்ள சிகிச்சை நிலையங்களுக்கு சென்று சிகிச்சை பெறவும், அல்லது அவர்களிற்கு போக்குவரத்துக்காக நோயாளர் காவு வண்டியை பயன்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது-என்றார். (அ)

## இலங்கையில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா!

கொழும்பு, ஜூலை. 09

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் தற்போது மீண்டும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களத்தின் தகவலின்படி, புதிதாக 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் இதுவரை பதிவாகியுள்ள கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 64 ஆயிரத்து 217 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் அண்மைக்காலங்களில் ஒற்றை இலக்கங்களிலேயே கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை பதிவாகி வந்தன.

இந்த நிலையில், தற்போது அதில் சிறிது அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால், மக்கள் அனைவரையும் 3ஆம் மற்றும் 4ஆம் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜப்பான் முன்னாள் பிரதமரின் மறைவுக்கு மஹிந்த இரங்கல்

கொழும்பு, ஜூலை. 09

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் மறைவுக்கு முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ருவிட்டர் பதிவொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த பதிவில் ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே இலங்கையின் ஒரு உண்மையான நண்பராக இருந்தார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## தற்போதைய...

தற்போதைய நிலைமைக்கு இன்னும் சில தினங்களில் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார சவால்களை முறியடித்து, ஏற்றுமதி மற்றும் விவசாயப் பொருளாதாரத்திற்கு முன்னுரிமை அளித்து புதிய முதலீடு களுடன் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கமாக இருந்தது.

எவ்வாறாயினும், முழு உலகமும் எதிர் கொள்ளும் கொரோனா வைரஸ் பரவல் நிலைமை அனைத்து நாடுகளையும் கடு மையான பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச் சென்றுள்ளதாகவும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகளைத் தேடுவதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிலை நம்மைப் போன்ற பண கையிருப்பு இல்லாத நாட்டின் பொரு ளாதாரத்தை பெரிதும் பாதிக்கும் என வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தில் ஏற்பட் டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண ஜனாதிபதி அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடனும் கலந்துரை யாடினார், அதற்கான பதில்கள் தோல்வியடைந்த நிலையில், ரணில் விக்ரமசிங்கவை பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை மிகவும் வெற்றியடைந் துள்ளதுடன், அடுத்த சில வாரங்களுக் குள் கடன் உதவித் திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்குத் தேவையான பின்னணியும் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக அரச தலை வர்களுடன் தொலைபேசி மூலமாகவும், பல நாடுகளின் தூதுவர்களுடனும் கலந் துரையாடல்களை மேற்கொண்டதாக வும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நீண்ட மற்றும் நன்கு திட்டமிடப் பட்ட முயற்சிக்குப் பிறகு, நாடு இப் போது அதன் முடிவுகளைப் பெற்றுள்ளது.

அத்தியாவசிய மருந்துகளின் இருப்பு ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

இந்திய கடன் வசதிகளின் கீழ் 65,000 மெற்றிக் தொன் உரம் முன்பதிவு செய் யப்பட்டுள்ளதுடன், 44,000 மெற்றிக் தொன் உரங்களை ஏற்றிச் செல்லும் முதலா வது கப்பல் நாட்டை வந்தடைய உள்ளது.

ஜூலை 12 முதல் எரிபொருள், எரி வாயு மற்றும் முன்பதிவு செய்யப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் தொடர்ந்து பெறப்படும், மேலும் பல்வேறு விவசாய திட்டங்களின் கீழ் நாட்டில் உணவு பற் றாக்குறை ஏற்படாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

21ஆவது திருத்தம் ஏற்கனவே அமைச் சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வெற்றிகரமான தீர்வுகள் கிடைத்துள்ள இவ்வேளையில் எதிர்க்கட்சி அரசியல் குழுக்கள் மக்களை தவறாக வழிநடத்து வது மிகவும் வருத்தமளிப்பதாக ஜனாதி பதி தெரிவித்தார்.

இது நாட்டை மீண்டும் பின்னோக்கி செல்ல வைக்கும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சரியான பொருளாதார வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு நல்லதொரு நாட்டை கட்டியெழுப்புவதற்கு உறுதுணையாக இருப்பது மக்களின் பொறுப்பும் கடமை யும் ஆகும், தற்போதைய நிலைமையை சரியாக புரிந்து கொண்டு அமைதியாக வும் புத்திசாலித்தனமாகவும் செயற்படுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தனது...

நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மாளி கைக்கு முன்பாக தொடர்ச்சியாக சத்தி யாக்கிரக போராட்டம் இடம்பெறவுள்ள தாக புலனாய்வு பிரிவு உறுதிப்படுத்தி யுள்ளது.

இதைத் தொடர்ந்தே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரின் பாது காப்புக் காரணங்களுக்காக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இதனிடையே, ஜனாதிபதி மாளிகைக் குள் போராட்டக்காரர்கள் நுழைவதைத் தடுக்குமாறு கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தப் போராட் டத்தை ஒட்டி பெருமளவான பொலிஸ ார் கொழும்பில் குவிக்கப்பட்டுள்ளனர். 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத் தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். தலை நகரைப் பாதுகாப்பதற்காக இவ்வளவு பெருந்தொகையான பாதுகாப்பு தரப் பினர் குவிக்கப்பட்டிருப்பது வரலாற்றில் இதுவே முதல்தடவை என்று தகவல்கள் தெரிய வருகின்றன. (ஐ-சி)

## இன்று அரசுக்கு...

அதே நேரத்தில், போராட்டங்களை ஏற்பாடு செய்வோர் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடுமாறும், அத்தி யாவசிய மருத்துவ அல்லது மனிதாபி மான சேவைகளுக்கு இடையூறு விளை விக்காமல் இருக்குமாறும் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் செய்தித் தொடர்பாளர் ரவினா ஷம்தாசனி அறிக்கை ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட் டங்களை கண்காணிக்கவும் அறிக்கை செய்யவும் உரிமை உண்டு,

எனவே, அவர்கள் தமது செயல்பாடு கள் பாதுகாக்கப்படவேண்டும். அவர் களின் பணிகள் எந்த வகையிலும் தடுக் கப்படக்கூடாது என்று பாதுகாப்புப் படையினருக்கு தெளிவான அறிவுறுத் தல்களை வழங்குமாறு இலங்கையின் அதிகாரிகளை தாம் கேட்டுக்கொள்வ தாக ரவினா ஷம்தாசனி குறிப்பிட்டுள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மோசமடைந்து வரும் பொருளாதார நிலைமை, அதிகரித்து வரும் பதற்றங் களுக்கு வழிவகுத்தது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் மற்றும் பொலிஸ் மற்றும் ஆயுதப்படை உறுப்பினர்களுக்கு இடையே பல மோதல்கள் ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொலிஸார் சில வேளைகளில் கண் ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் தாரை பிர யோகத்தை தேவையற்ற விதத்தில் பயன் படுத்தியுள்ளனர்.

சில சமயங்களில் ஆயுதப்படைகள் துப்பாக்கி பிரயோகமும் மேற்கொண் டுள்ளனர்.

எனினும் அனைத்து இலங்கையர் களுக்கும் கருத்து சுதந்திரம், அமைதி யான முறையில் ஒன்றுகூடல் மற்றும் பொது விவகாரங்களில் பங்கேற்கும் உரிமை உள்ளது. தேசத்தின் வாழ்க்கை யில், சர்வதேச சட்டத்தின் கீழ், விதி விலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே கூட்டங்கள் கலைக்கப்படமுடியும்.

அத்துடன் முற்றிலும் அவசியமான மற்றும் கடைசி முயற்சியாகவே பலப் பிரயோகத்தை பயன்படுத்துவதன் முடி யும்-என்றார். (அ)

## அமைதி...

கைகளை தவிர்க்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

எந்தவித வன்முறைகளிலும் ஈடுபடு பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக் கும் விதத்தில் பொலிஸாருக்கும் பாது காப்பு படையினருக்கும் அதிகாரமளிக் கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள, அவர் எப்போதும் தாய்நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கான அர்ப் பணிப்புடன் உள்ள படையினருக்கு பொதுமக்கள் ஆதரவை வழங்கவேண் டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மரியாதைக்குரிய தலைவரை இழந்துவிட்டது ஜப்பான் நாடு

## ஜனாதிபதி கோட்டாபய இரங்கல்



கொழும்பு, ஜூலை. 09

ஜப்பான் மிகவும் மரியாதைக்குரிய அரசியல்வாதியை இழந்துவிட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் நேற்றுக் காலை இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் ஷ ின்சோ அபே சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார் என ஜப்பானின் தேசிய ஒளிபரப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்து ருவிட்டரில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ,

“ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் துயர மரணம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. ஜப்பான் மிகவும் மரியாதைக்குரிய அரசியல் வாதியை இழந்துவிட்டது.

அவரது குடும்பத்தினருக்கும், ஜப் பான் மக்களுக்கும் எனது இதயப்பூர்வ மான இரங்கலைத் தெரிவித்துக் கொள் கிறேன்” என பதிவிட்டுள்ளார். (அ)

## ஜப்பானின்...

துப்பாக்கி சூட்டால் காயமடைந்த அவருக்கு மாரடைப்பும் ஏற்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

(முன்னர் வந்த செய்தி பக்கம் 12இல்)

## பல்கலை...

நீர்த் தாரைப் பிரயோகம் செய்தும் கலைத்தனர்.

கொழும்பில் உள்ள மத்திய வங்கிக்கு அருகாமையில் வைத்து இந்தப் பேரணி கலைக்கப்பட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட்ட பேரணி களனி பல்கலைக்கழகம் முன்பாக ஆரம்ப மாகியிருந்தது.

இன்று சனிக்கிழமை நாடளாவிய ரீதி யில் இடம்பெறவுள்ள அரச எதிர்ப்பு ஆர்ப் பாட்ட பேரணிக்கு ஆதரவாக நேற்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன் றியத்தினர் இந்த ஆர்ப்பாட்ட பேரணியை முன்னெடுத்தனர்.

இதேவேளை, அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஆர்ப்பாட் டத்தை தடுத்து உத்தரவு ஒன்றைப் பிறப் பிக்குமாறு கறுவாத்தோட்ட பொலி ஸார் கொழும்பு பிரதான நீதிவான் நீதி மன்றில் நேற்று முன்வைத்த கோரிக் கையை கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க நிராகரித்து உத்தரவிட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## கோட்டாபய...

செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் ஊரடங்குச் சட்டத்தை மீறி அதிகாரத் தைக் கைப்பற்றுவதற்கான இறுதிப் போரில் இணையுமாறு அனைத்து மக்களையும் நாங்கள் அழைக்கிறோம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

உயர்மட்டத்தின் உத்தரவுகளைப் பின்பற்றவேண்டாம் என்றும் கிளர்ச்சி யில் பங்கேற்குமாறும் பாதுகாப்புப் படையினரையும் பொலிஸாரையும் கேட்டுக்கொள்கிறோம் என்றும் ரஞ்சித் மத்தும பண்டார கூறினார்.

மக்கள் தலைநகருக்கு வருவதை தடுக் கும் வகையில் எரிபொருள் விநியோ கத்தை நிறுத்துமாறு அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக அவர் கூறினார்.

நாசவேலையின் மூலம் ரயில் போக் குவரத்தை நிறுத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)

## கொழும்பில்...

காலி முகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்களத்திலிருந்து பிரதான போராட்டம் ஆரம்பமாகிறது. இதே சமயம், கொழும்பு - கம்பஹா மாவட் டங்களின் பல்வேறு இடங்களிலிருந்தும் புறப்படும் பேரணிகள் ஜனாதிபதி மாளி கையை முற்றுகையிடும். அத்துடன், தொடர்ச்சியாக அங்கேயே அரசாங்கம், ஜனாதிபதியை பதவி விலகுமாறு வலியுறுத்தி சத்தியாகிரகப் போராட்டம் இடம்பெறும்.

**கட்சிகள் ஆதரவு**

மக்கள் - மாணவர்கள் - மதத் தலை வர்கள் எனப் பல்வேறு தரப்பினர் ஒன் றிணைந்து முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, சிறீ லங்கா சுதந் திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே. வி. பி, சுயாதீன பாராளுமன்ற உறுப் பினர்கள் குழு, சிறீ லங்கா முஸ்லிம் காங் கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முழு மையான ஆதரவை வழங்கியுள்ளன.

இந்தப் போராட்டத்துக்கு தடை கோரி கொழும்பு நீதிமன்றங்களை பொலிஸார் நாடியிருந்தனர். ஆனால், தடை விதிப்பதற்கு நீதிமன்றங்கள் மறுப்பு தெரிவித்து விட்டன.

எது எப்படி இருப்பினும், போராட் டங்களை தடுப்பதற்கு பல்வேறு விடயங் கள் முன்னெடுக்கப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ “அனைத்துப் பிரச்னைகளுக்கும் ஓரிரு நாட்களில் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன”, என்று அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து, கொழும்பு, கம்பஹா மாவட்டங்களின் சில பகுதி களுக்கு நேற்றிரவு 9 மணி முதல் ஊர டங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபை தொழில்சங்கப் போராட்டம்கூட அர சாங்கத்தின் திட்டமிட்ட செயல்பாடு என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் படுகின்றன.

இதேநேரம், கடந்த மே 9 போராட் டத்தின்போது தனியார் பேருந்துகளுக்கு பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டதாக சுட்டிக்காட்டி தனியார் பேருந்துகள் போராட்டக்காரர்களை ஏற்றியிறக்கும் பணிகளில் ஈடுபடாது என்றும், எனினும், விரும்பிய பேருந்து உரிமையாளர்கள் அந்த சேவையில் ஈடுபடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாதுகாப்பு உச்சம்**

மக்கள் போராட்டத்தை அடுத்து தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. 6,296 பொலிஸாரும், 1,830 இராணுவத் தினரும், 1,000 சிவில் பாதுகாப்பு படை யினருமாக 9,126 பேர் கடமையில் ஈடு படுத்தப்பட்டுள்ளனர் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த எண்ணிக்கையிலும் விட அதிகளவான படையினரும், புலனாய்வுப் பிரிவினரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அறிய வருகின்றது.

எது எப்படி இருப்பினும், இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக நேற்று முதலே பெருமளவு மக்கள் போராட்டக் களங்களில் குவிந்து வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu



# கரைச்சி பிரதேச சபையின் சிற்றூழியர்கள் போராட்டம்

கிளிநொச்சி, ஜூலை. 09

கரைச்சி பிரதேச சபையின் சுகாதார சிற்றூழியர்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்த போராட்டம் நேற்று முற்பகல்10.30 மணியளவில் பிரதேச சபை முன்பாக ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

தமது சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்ட நிலையில், தாம் கடமைக்கு செல்வதற்கு பெற்றோல் பெற்றுத்தருமாறு கூறியே அவர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட குழுவினர் மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து மகஜர் ஒன்றை கையளிக்க சென்றனர். இந்த நிலையில் குறித்த போராட்டக்காரருடன் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் கலந்துரையாடினார். (அ)

# இலங்கை போக்குவரத்துச் சபையின் பணியாளர் கடமையிலிருந்து விலகல்

கொழும்பு, ஜூலை. 09

இலங்கை போக்குவரத்து சபை பணியாளர்கள் நேற்று நண்பகல் 12 மணி முதல் கடமையிலிருந்து விலகியுள்ளனர். தங்களின் போக்குவரத்துக்கு எரிபொருள் வழங்கப்படாவிட்டால், நேற்று நண்பகல் முதல் கடமைக்கு செல்லப்போவதில்லை என இலங்கை போக்குவரத்துச் சபை தொழிற்சங்கம் எச்சரித்திருந்தது.

அகில இலங்கை போக்குவரத்து சேவையாளர் சங்கத்தின் தலைவர் சேபால லியனகே இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக, இலங்கை போக்குவரத்து சபையில் பணியாற்றும் ஊழியர்கள், சேவைக்கு சமுகமளிக்க முடியாதுள்ளது. அத்துடன், சேவை நிறைவடைந்து மீள வீடு திரும்பவும் முடியாத நிலை காணப்படுகிறது.

பல மாதங்களுக்கு முன்பே இந்த விடயம் தொடர்பில், அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து அமைச்சருக்கும் அறிவிக்கப்பட்டபோதிலும், எந்தவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என இ.போ.ச. தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர்.

இந்நிலையில்,இலங்கை போக்குவரத்துச் சபை பணியாளர்கள் கடமையிலிருந்து விலகியுள்ளனர்.

இந்நிலையில், தமது கோரிக்கை தொடர்பில், போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் பேச்சுவார்த்தையொன்றை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. (அ)







# அமைதியான போராட்டக்காரருக்கு பொலிஸார் இடமளிக்கவேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் கோரிக்கை



**கொழும்பு, ஜூலை. 09 அமைதியான போராட்டக்காரர்களுக்கு இராணுவம் மற்றும் பொலிஸார் இடமளிக்க வேண்டும். அத்துடன் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று நினைவூட்டுகிறேன் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ருவிட்டரில் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.**

"வன்முறை ஒரு தீர்வாகாது. நீங்கள் போராட்டம் நடத்தப் போகிறீர்கள் என்றால், தயவு செய்து அமைதியாக நடந்து கொள்ளுங்கள் என்று அமெரிக்க தூதுவர் கோரிக்கை விடுத்துள்ளார். "குழப்பமும், பலப்பிரயோகமும் தற்போதைய நிலையில் இலங்கையர்களுக்கு பொருளாதாரம் அல் லது அரசியல் ஸ்திரத்தன்மையை கொண்டு வராது" என்றும் ஜூலி சங் தனது ருவிட்டரில் பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

# மின்சார கட்டணங்களை செலுத்துவதற்கு புதிய முறை அறிமுகப்படுத்த தீர்மானம்

கொழும்பு, ஜூலை. 09

மின்சாரக் கட்டணங்களை வழங்குவதற்கு இதுவரை பின்பற்றப்பட்டு வந்த, முன் அச்சிடப்பட்ட கட்டண பட்டியலை வழங்கும் முறைக்குப் பதிலாக, புதிய முறைமைகளை அறிமுகப்படுத்த இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளது.

துண்டுச்சீட்டு முறைமை அதற்கமைய, மின்வாசிப்பின் பின்னர், ஏதேனும் காரணங்களுக்காக பற்றுச்சீட்டு தேவைப்படும் நுகர்வோருக்கு தெர்மல் பிரின்டிங் முறையிலான உடனடி துண்டுச்சீட்டு வழங்கப்படும்.

குறுந்தகவல் முறைமை மின்வாசிப்பு பெறப்பட்டதன் பின்னர், மாதாந்த மின்சாரக் கட்டணம் இலங்கை மின்சார சபையில் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசி எண்ணுக்கு ஒரு குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும்.

இதற்கான பதிவினை பெற, வீட்டுக்கு வளாகத்திற்கு வரும் மின்மானி வாசிப்பாளரின் ஆதரவைப் பெறலாம் அல்லது சுநுபு ஈஇடைவெளி, பத்து இலக்க மின்சாரக் கணக்கு எண் என்றவாறு உள்ளீடு செய்து 1987 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்புவதன் மூலம் பதிவு செய்துகொள்ளலாம்.

கைப்பேசி செயலி மூலமான கட்டண விபரம் CEB Care கைப்பேசி செயலியைப் பயன்படுத்தி மாதாந்திர மின்வாசிப்பின் பிறகு கட்டண விபரத்தை பெறும் வசதியும் வழங்கப்படுகிறது.

நுகர்வோருக்கு வினைத்திறனான சேவையை வழங்கவதற்கும், நிறுவன நடவடிக்கைகளை கணினிமயப்படுத்தும் நோக்கிலும் இந்த மூன்று புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

# தனிநபரிடம் மீட்கப்பட்ட 6800 லீற்றர் டீசல் கிளிநொச்சி மாவட்ட செயலரிடம் கையளிப்பு

கிளிநொச்சி, ஜூலை. 09

தனிநபரிடமிருந்த மீட்கப்பட்ட 6800 லீற்றர் டீசல் அத்தியாவசிய சேவைகளிற்காக மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி நீதிமன்றினால் குறித்த எரிபொருள் இன்றைய தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி கரடிப்போக்கு பகுதியில் கடந்த வாரம் சட்டத்துக்கு முரணாக கையிருப்பில் வைத்திருந்த டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெயே இவ்வாறு நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகளுக்காக பயன்படுத்த கையளிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனன் உள்ளிட்ட குழுவினர் நீதிமன்றப் பதிவாளரை சந்தித்து குறித்த எரிபொருட்களை பெற்றுக்கொண்டனர்.

குறித்த விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிடுகையில்-

எமக்கு கிடைக்கப்பெற்ற எரிபொருளில் 6800 லீற்றர் டீசல் காணப்படுகின்றது.

அதனை நீதிமன்றம் மாவட்ட செயலகத்துக்கு கையளித்துள்ளது. அதன் பிரகாரம் குறித்த எரிபொருளை கூட்டுறவு சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கையளித்து அவற்றை அத்தியாவசிய சேவைகளுக்காக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# 12 இந்திய மீனவர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், ஜூலை. 09

பருத்தித்துறை கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 12 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் 12 பேரும் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 3 ஆவடுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை அவர்கள் 12 பேரின் உடைமைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (அ)

# ஐ.ஓ.சி எரிபொருள் நிலையங்கள் பாதுகாப்புக்காக இன்று மூடல்?

கொழும்பு, ஜூலை. 09

பாதுகாப்பு முன்னெச்சரிக்கையாக நாடு முழுவதும் உள்ள அனைத்து எரிபொருள் நிலையங்களையும், திருகோணமலையில் உள்ள பெற்றோலிய முனையத்தையும், லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் (எல்.ஐ.ஓ.சி) இன்று மூட வாய்ப்புள்ளதாக அதன் நிர்வாக இயக்குநர் மனோஜ் குப்தா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையினை கருத்தில் கொண்டு தமது முனைய எரிபொருள் நிலையங்களை மூடுவது தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாக அவர் கூறினார்.

நேற்று முன் தினம் இரவு காலியில் எரிபொருள் வரிசையில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் 25 வயது இளைஞன் உயிரிழந்த சம்பவத்தையடுத்து எரிபொருள் நிலையங்களின் பாதுகாப்பு குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை வழங்கும் அதே வேளையில் ஐ.ஓ.சி மட்டுமே தற்போது தனியார் வாகனங்களுக்கு எரிபொருளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : றுநுநுமு நுனு ஆமுஜஐநு
04.30 மணி : மனிதனின் மறுபக்கம் -விவேக்



05.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை பொதுப்போக்குவரத்தின் வெற்றி பொதுமக்கள் கையிலா அதிகாரிகள் கையிலா




7.00 மணி : நமக்காக நாம் வீட்டுத்தோட்டம்-புத்தம் புதிய நிகழ்ச்சி



7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் நிதி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு